பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 மார்கழி 6 ஞாயிற்றுக்கிழமை (21-12-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 23

## யாழ். உள்ளூராட்சித் தேர்தல்:

# தமிழ் கட்சிகள் மீண்டும் கூடி இன்று இறுதி முடிவு செய்யும்

## ரெலோ வர தாமதம் ஏற்பட்டதால் நேற்றைய கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசம்பர் 21

யாழ். மாவட்டத்தில் நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்தலை பகிஷ்கரிப்பதா? அல்லது இல்லையா? என்பது குறித்து ஆராய நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற தமிழ்க் கட்சிகளின் கூட்டம் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ரெலோ அமைப்பின் முதல்வர் எம். கே. சிவாஜிலிங்கம் தலைமையிலான குழுவினர் கொழும்பில் இருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்து சேருவதில் தாமதம் ஏற்பட்டதால் நேற்றைய கூட்டத்தில் ரெலோ அமைப்பு பங்குபற்ற முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதனாலேயே கூட்டம் இன்றுவரை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எவரும் போட்டியிட முன்வராவிடில் வேட்புமனு தாக்கல் பின் போடப்படும்

### தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவிப்பு

கொழும்பு, டிச. 21

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 12 மணி வரை எவரும் வேட்பு மனு தாக்கல் செய்யாவிடில் வேட்பு மனு ஏற்கும் காலம் பின் போடப்படும். செவ்வாய் நண்பகலுக்கு முன் ஏதாவது ஒரு கட்சி மட்டும் வேட்பு மனு தாக்கல் செய்திருப்பின் அக் கட்சி போட்டி இல்லாது தேர்ந்தெடுக்கப்படும்.

மேற்கண்டவாறு தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்திருப்பதாக ரூபவாஹினி நேற்றுத் தெரிவித்தது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலன்னறுவையில் மின்மாற்றி நேற்று குண்டு வைத்துத் தகர்ப்பு

### சுற்றிவளைப்பில் 30 தமிழர்கள் கைதாகினர்

மட்டக்களப்பு, டிச. 21

பொலன்னறுவை மாவட்டம் ஜெயந்திபுரவில் நேற்று அதிகாலை இரு மின் மாற்றிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

5.15க்கும் 5.30க்கும் இடையில் எதிரொலித்த இரு குண்டு வெடிப்புக்களினால் ஹிங்குராகொட ஜெயந்திபுர பிரதேசங்கள் அதிர்ந்தன என பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

மற்றுமோர் மின் மாற்றியின் கீழ் இருந்து மீட்கப்பட்ட குண்டு ஒன்று இராணுவத்தினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# "வெற்றி உறுதி" படையணிகளின் உயர் மட்டத்தில் பெரும் மாற்றம்!

## நகர்வை மீண்டும் ஆரம்பிக்க படையினர் தயாராகின்றனர்

கொழும்பு, டிச. 21

மன்னகுளம் தாக்குதலை அடுத்து வன்னியில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிக்க படையினர் தயாராகி வருகின்றனர். இது இறுதிக் கட்ட இராணுவ நடவடிக்கையாக இருப்பதால் இதில் ஈடுபட்டுள்ள முக்கிய இரு படையணிகளின் உயர் மட்டத்தில் இராணுவத் தளபதி ஜெனரல் றொஹான் தளுவத்த மாற்றங்களைமேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெற்றிஉறுதி இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் 53 ஆம் படையணியின் கட்டளையிடும் அதிகாரியாக இருந்த பிரிகேடியர் வசந்த பெரேரா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 4 கைதிகள் தப்பி ஓட்டம்

கொழும்பு, டிச. 21

வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து பொறளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதிகளில் 4 பேர் தப்பிச் சென்று விட்டனர்.

மேலும் தப்பியோட முனைந்த மூன்று கைதிகள் பொலீஸாராலும் சிறைச்சாலை அதிகாரிகளாலும் கைது செய்யப்பட்டனர்.

தப்பியோடிய 4 பேரில் ஒருவர் கொலைக் குற்றவாளியாவார். ஏனையோர் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டது. (இ-9)

## அரசுசார்பில்வேட்புமனுதாக்கல் செய்வது குறித்து ஆலோசனை

கொழும்பு, டிச. 21

யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு எந்த ஒரு கட்சியாவது அல்லது குழுவாவது முன்வராவிட்டால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பாக வேட்பு மனுத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன் துறையைச் சேர்ந்த சின்னமுத்து தம்பிமுத்து என்பவர் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலில் 5 படையினர் பலி!

கொழும்பு, டிச. 21

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள வாகனேரியில் நியான்குளம் காவல் நிலையத்திலிருந்து புறப்பட்ட படையினரை விடுதலைப் புலிகள் சிறு ஆயுதங்கள் கொண்டு தாக்கியதில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயம் அடைந்தார்.

படையினர் வீதித் தடைகளை அகற்ற வந்தபோதே தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கிளிநொச்சி - ஆனையிறவு வீதியில் கிளைமோர் தாக்கு

### மூன்று படையினர் கொல்லப்பட்டனர்

கிளிநொச்சி— ஆனையிறவு வீதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலின் 3 படையினர் கொல்லப்பட்டனர்.

ஆனையிறவு முகாமிலிருந்து கிளிநொச்சி முகாம் நோக்கிச் சென்ற இராணுவ டிரக் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இச் சம்பவத்தில் 10 படையினர் காயமடைந்துள்ளார்கள் என்றும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் பலாலி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். (இ-8-9-21)

## பொலீஸ் துப்பாக்கிச் சூட்டில் முஸ்லிம் மீனவர் ஒருவர் பலி!

### காத்தான்குடியில் நேற்றுச் சம்பவம்

மட்டக்களப்பு, டிச. 21

மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்று அதிகாலை மொகமத்தம்பி மஹ்ரூப் (37 வயது) என்னும் முஸ்லிம் மீனவர் பொலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானார்.

வாவியில் மீன் பிடித்துக் கொண்டிருக்கையில் இவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் புளொட் உறுப்பினர் பலி!

வவுனியா, டிச. 21

வவுனியாவில் நேற்று மாலை 6.30 மணி அளவில் புளொட் உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குருசைப்பிள்ளையார் குளம் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

பரத் என்று அழைக்கப்படும் இராசலிங்கம் நந்தகுமார் (36 வயது) என்பவரே சுடப்பட்டவர் ஆவார். (இ-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பு சிவபாதசுந்தரம்

(உரிமையாளர், வாணி உணவகம், மல்லாவி)

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்போது மல்லாவியில் வசித்தவருமான தம்பு சிவபாதசுந்தரம் 17 - 12 - 97 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் கண்ணம்மா தம்பதிகளின் மருமகனும், சிவசோதியின் அன்புக் கணவரும், சுதாகரன் (பிரான்ஸ்), சிவகரன், சிவதரன், அகிலா, ஜெனகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற விவேகம்மா இராமச்சந்திரன், ஈஸ்வரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருஞானம் (பிரான்ஸ்), அருணகிரி (உரிமையாளர், ஆரணி மில்ஸ்), குணசோதி, நகுலநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (21 - 12 - 97) இன்று ஞாயிற்றுக்கிழமை மல்லாவியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வை. அருணகிரி
(மைத்துனர்)

258, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(51983)

## அம்பலவி சுந்தரம்

திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட அம்பலவி சுந்தரம் 20-12-97 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் குணசேகரியம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வசந்தமலர், திருச்செல்வம் (பரந்தன் இரசாயனக் கொம்பனி லிமிட்டட்), ஞானச்செல்வம் (இந்தியா), வசந்தாதேவி, கிருபாகரன் (லெபனான்), கருணாகரன் (ரஜனி மோட்டோஸ், ஸ்ரான்லி வீதி), கருணாநிதி (Office, Equipments Ltd), காலஞ்சென்ற நடேசர், உதயகுமார் (இந்தியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், தியாகராஜா, தம்பிமுத்து, சூரியகுமாரி, பிரபா (லெபனான்), புஸ்பலீலா (இந்தியா), ரஜனி ஆகியோரின் மாமனாரும், பூரணம், காலஞ்சென்றவர்களான கந்தையா, தம்பிப்பிள்ளை, கனகம்மா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-12-97 ஞாயிற்றுக்கிழமை 12 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வெலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. திருச்செல்வம்
(மகன்)

446, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(51996)

## திருமதி பராசக்தி இராமலிங்கம்

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த திருமதி பராசக்தி இராமலிங்கம் 16-ஆம் திகதி சாவகச்சேரியில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற சிவசுந்தரம்பிள்ளை இராமலிங்கம் (ரயில்வே திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், இராஜசுந்தரம் (U. K.) செல்வராணி (வெள்ளவத்தை), இராஜகுலசிங்கம் (சாவகச்சேரி), இராஜதுலேந்திரன் (கனடா), இராஜநாயகம் (கனடா), இராஜதுரை (கனடா), புஸ்பராணி U K.), இராஜநவநாதன் (U K) ஜெயராணி (சாவகச்சேரி), இராஜமனோகரன் (அவுஸ்திரேலியா), இராஜவிக்னேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், திலகவதி, காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் ஞானேஸ்வரி, செந்திமலர், நளாயினி, சுசிலா, குகதாசன், சியாமளா, சிறீதரன், ரதி, மைத்திரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-12-97) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-00மணி (பழையநேரம்) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
இ. இராஜகுலசிங்கம்
(மகன்)
மு. சிறீதரன் (மருமகன்)

"சக்தி"
தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(சி/2432)

## திருமதி மகேஸ்வரி இராஜரட்ணம்

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி இராஜரட்ணம் (முன்னாள் உப - அதிபர் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, அதிபர், யா/வல்லை மகளிர் கல்லூரி) அவர்கள் 3-12 97 அன்று லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி முருகுப்பிள்ளை (ஆசிரியர்) ஆகியோரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற செல்லப்பா இராஜரட்ணத்தின் (தெல்லிப்பழை) அன்புமனைவியும் அன்ரன் இராஜதுங்கனின் (MSc, London) அன்புத் தாயாரும், சிவஞானவதியின் (மணி - சாவகச்சேரி) அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் 6-12-97 அன்று லண்டனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருள்திரு V. இராஜ்குமார்
(மருமகன்)

"குரு இல்லம்"
உடுவில்.

(51982)

### கேள்விப்பத்திரம் நிராகரிப்பால்

# அமெரிக்க - இலங்கை வர்த்தக உறவில் நெருக்கடி ஏற்படும் நிலை

கொழும்பு, டிச. 21

ரயில் என்ஜின்களை கொள்வனவு செய்வதற்குக் கோரப்பட்ட கேள்விப் பத்திரங்கள் பிரெஞ்சு நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டது தொடர்பாக அமெரிக்கா இலங்கையுடனான வர்த்தக உறவுகளில் சில மாற்றங்களை கொண்டு வருவது குறித்து ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

குறைந்த விலையும் அதே நேரம் சிறந்த தொழில் நுட்பமும் கொண்ட ரயில் என்ஜின்களை விநியோகிப்பது தொடர்பாக அமெரிக்க நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தை அமைச்சரவை நிராகரித்து அதைப் பிரெஞ்சு நிறுவனத்துக்கு வழங்கியது தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்து தனது அதிருப்தியை வெளியிட்டுள்ள அமெரிக்கா ஸ்ரீலங்காவை தனது நல்ல வர்த்தகப் பங்காளி அல்ல எனத் தீர்மானிக்கவுள்ளதாகக் கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

அவ்வாறான ஒரு முடிவுக்கு அமெரிக்க அரசு வருமானால் ஸ்ரீலங்காவில் இருந்து இறக்குமதி செய்யும் ஆடைக் கொள்வனவை அமெரிக்கா மட்டுப்படுத்தும் என ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திரத்தை நிராகரித்தது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசிடம் விளக்கம் கோரியுள்ள அமெரிக்கத் தூதுவரின் கடிதத்தில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்படவில்லையாயினும் ஸ்ரீலங்காவை ஒரு நல்ல வர்த்தகப் பங்காளியாகத் தொடர்ந்து கருத முடியாது உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா வருடாந்தம் 9 ஆயிரத்து 600 கோடி ரூபா பெறுமதியான பொருள்களை இலங்கையில் இருந்து கொள்வனவு செய்கிறது. ஆனால் ஸ்ரீலங்காவோ ஆயிரத்து 200 கோடி ரூபா பெறுமதியான பொருள்களையே அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்கிறது.

(இ-10)

## வதிரி டயமன்ட்ஸ் வைரவிழா

யாழ்ப்பாணம், டிச. 21

வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வைரவிழாவை முன்னிட்டு விளையாட்டுச் சுற்றுப் போட்டிகள் பல நடத்தப்பட உள்ளன.

இதன் முதல் கட்டமாக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை திங்கட்கிழமை கழக மைதானத்தில் நடைபெறஉள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் மு. வேதாபரணம் கழகக் கொடியை ஏற்றிநிகழ்வுகளை ஆரம்பித்துவைப்பார்.

24 கழகங்கள் இச் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்ள உள்ளன. முதல் நாள் போட்டியில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் விளையாடும்.

இந்தப் போட்டிகளைத் தொடர்ந்து மென்பந்தாட்டப் போட்டிகளும் கரப்பந்தாட்டப்போட்டிகளும் நடைபெறும்.

(இ-9)

## களுத்துறையில் மரணச்சடங்கு

கொழும்பு, டிச. 21

களுத்துறை சிறைச்சாலை சம்பவத்தில் கொல்லப்பட்ட மூவரில் ஒருவரான மருதலிங்கம் தர்மலிங்கம் என்பவரின் மரணச் சடங்கு நேற்று களுத்துறையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்த உறவினர்கள் மற்றும் மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் உட்பட பல பிரமுகர்கள் மரணச்சடங்கில் கலந்து கொண்டனர். (இ-21)

## நீர் இறைக்கும் இயந்திரம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிச. 21

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் நீர் விநியோகம் சம்பந்தமாக இதுவரை காலமும் நிலவிவந்த சிரமம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலை ஊழியர்களினதும், நோயாளர்களினதும் நலன் கருதி சில்லாலையைச் சேர்ந்த க. உருத்திராபதி என்பவர் மின்சாரத்தில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை அன்பளிப்பு செய்துள்ளார்.

அவருக்கு நன்றி தெரிவித்து மாவட்ட வைத்திய அதிகாரி க. மயிலேறும் பெருமாள் தனிப்பட்ட கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (ஐ-8)

## முட்பற்றைகள் பயணிகளுக்கு இடைஞ்சல்

செம்பியன்பற்று, டிச. 21

வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனை பகுதிகளில் வீதி ஓரங்களில் வளர்ந்து நிற்கும் முட்பற்றைகள் வெட்டப்படாமையால் வீதியால் பிரயாணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

(ஐ-36)


# லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்
[illegible]

(51893)



# WANTED

**A Chauffer is required for an International Organisation and should be able to work in Colombo and Jaffna.**

Accommodation & food will be provided in Colombo.

Preference would be given to those who have earlier worked in Colombo and who can Speak Sinhala fluently.

**Apply Within Five days.**


Advertiser:

C/o UTHAYAN

361, Kasthuriyar Road, Jaffna.

(C/2435)


## 10-ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 09 — 02 — 1937

உதிர்வு: 21 — 12 — 1987

### அமரர் சீ. செல்லத்துரை

(யாழ் போதனா வைத்தியசாலை முன்னாள் மேற்பார்வையாளர்)

பத்தாண்டுகள் பறந்திட்டாலும்
பாசநெஞ்சங்கள் துயரத்துடன் நினைந்திடும்.

உங்கள் பிரிவால் துயருறும்:

அன்பு மனைவி: தவமணிதேவி,
பாசமிகு மகள்: த. ஜெகதீஸ்வரி (இத்தாலி), சு. ஜெயந்தி (ஜேர்மனி), ஜெ. ஜெயஸ்ரீ (ஜேர்மனி),
மகன்: ஜெயகாந்தன் (சுவிஸ்), ஜெயரூபன் (இத்தாலி),
மருமகன்: அ. தர்மரட்ணம் (இத்தாலி), சு. சுவேந்திரன் (ஜேர்மனி), ஜெயானந்தராசா (ஜேர்மனி),
மருமகள்: ஜானகி (சுவிஸ்),
பேரப்பிள்ளைகள்: நிலுஷா, நிக்சன் (இத்தாலி), டிலூஷன், டிலக்ஷன் (ஜேர்மனி) அதீனா (ஜேர்மனி), ஹர்ஷத்வன (சுவிஸ்).

- குடும்பத்தினர்

"ஈஸ்வரி வாசம்"
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

(51961)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் எயர் லைன் விமான விபத்தில் 104 பயணிகள் பலி

ஜகார்த்தா, டிச. 21

**ஜகார்த்தாவில் இருந்து சிங்கப்பூருக்குப் பறந்து கொண்டிருந்த சிங்கப்பூர் எயர் லைன்ஸ் போயிங் விமானம் ஒன்று சுமாத்திராவுக்கு அருகே வீழ்ந்து நொறுங்கியதில் அதிலிருந்த 104 பயணிகளும் உயிரிழந்தனர்.**

சிங்கப்பூர் எயர் லைன்ஸின் துணை நிறுவனமான சில்க் எயர் நிறுவனத்துக்குச் சொந்தமான ''போயிங் 737'' ரக விமானமே சுமாத்திராவுக்கு அருகே உள்ள சதுப்பு நிலப்பகுதியில் வீழ்ந்து நொறுங்கியது.

விமானத்தின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் —

பயணிகள் எவரும் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என்றும் இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலியான பயணிகள் சிலரின் கடவுச் சீட்டுக்கள் அப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. பலியானோரில் ஒருவர் இந்தியர். ஏனையோர் சிங்கப்பூர் மற்றும் இந்தோனேசிய நாட்டவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துக்கான காரணம் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை. ''சில்க் எயர்'' நிறுவனத்தின் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானது இதுவே முதல் முறை ஆகும்.

இந்த விமானம் ஜகார்த்தாவில் இருந்து புறப்பட்ட ஒரு மணி நேரத்தில் கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பை இழந்தது.

விபத்தில் பலியானோரில் 97 பேர் பயணிகள், 7 பேர் விமான சிப்பந்திகள் ஆவர்.

(ஐ)

# விமானத்தை கடத்தி தரையிறக்கி 10 லட்சம் டொலர் கொள்ளை!

## பெருவில் நடந்த துணிகரச் சம்பவம்

லீமா, டிச. 21

பெரு நாட்டு விமான நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான சிறிய விமானத்தை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்ற நால்வர் விமானத்தை வலுக்கட்டாயமாகத் தரையிறக்கி அதிலிருந்த 10 லட்சம் டொலர் பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு தப்பிவிட்டனர்.

வடக்கு பெருவில் உள்ள ஓர் இடத்தில் இச் சம்பவம் இடப்பெற்றுள்ளது.

லீமாவில் இருந்து சென்று கொண்டிருந்த இந்த விமானத்தில் எட்டுப் பயணிகள் இருந்தனர். அவர்களில் நால்வர் திடீரென கத்திகள், துப்பாக்கிகள் சகிதம் விமானியை மிரட்டி விமானத்தைக் கடத்திச் சென்று கட்டாயப்படுத்தி தரையிறக்கினர். பின்னர் அதில் இருந்த 10 லட்சம் டொலர் பணத்தை அபகரித்துக் கொண்டு டிரக் ஒன்றில் ஏறித் தப்பிவிட்டனர்.

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இக் கடத்தல் சம்பவம் மார்க்சிஸ்ட் தீவிரவாதிகளின் கைவரிசையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

(ஐ)

# ஒருவார காலத்தில் மூன்றாவது விபத்து!

ஜகார்த்தா, டிச. 21

சுமாத்திரா தீவுக்கு அருகே நேற்று முன்தினம் இடம் பெற்ற விமான விபத்து கடந்த ஒரு வாரகாலப் பகுதியில் நடந்த மூன்றாவது விமான விபத்துச் சம்பவமாகும்.

தஜிகிஸ்தான் நாட்டு விமானம் ஒன்று கடந்த செவ்வாயன்று ஐக்கிய அரபு எமிரேட்சில் சார்ஜா விமான நிலையத்துக்கு அருகே பாலைவனப் பகுதியில் வீழ்ந்து நொறுங்கியதில் 85-க்கும் மேற்பட்ட பயணிகள் பலியாகினர்.

உக்ரைன் விமான சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான மற்றொரு விமானம் கடந்த வியாழன்று கிறீஸின் வடபகுதியில் விபத்துக்குள்ளானதில் 70-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

(ஐ)

# அகாலிதள் ஆதரவுடன் பஞ்சாபில் குஜ்ரால் போட்டி

புதுடில்லி, டிச. 21

இந்தியாவின் காபந்து பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் பஞ்சாப் மாநிலத்தின் ஜலந்தர் தொகுதியில் போட்டியிடவுள்ளார்.

குஜ்ராலுக்கு பூரண ஆதரவு வழங்க பஞ்சாப் மாநில ஆளும் கட்சியான அகாலிதள் முன்வந்துள்ளது. குஜ்ராலை ஆதரித்து தீவிர பிரசாரம் செய்யப்போவதாகவும் அது தெரிவித்துள்ளது.

''மண்ணின் மைந்தன்'' என்ற வகையில் பிரதமர் குஜ்ராலை தனிப்பட்ட முறையில் ஆதரிக்கத் தாங்கள் முன்வந்துள்ளதாக அகாலிதள்ளின் சிரேஷ்ட தலைவர்கள் தெரிவித்தனர்.

(ஐ)

# முன்னாள் அதிபர்களுக்கு பொதுமன்னிப்புக் கிடைக்கும்

சியோல், டிச. 21

தென் கொரியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள இரு முன்னாள் அதிபர்களும் விடுதலை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவது குறித்து தற்போதைய அதிபர் இம்யங் சேமும், புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அதிபர் கிம்-டே-யங்கும் நேற்று அறிவுப்பு ஒன்றை விடுக்க விருந்தனர்.

முன்னாள் அதிபர்களான சுங்-கு-வான், நோ-டே-ஹீ ஆகிய இருவருக்குமே நத்தாரை ஒட்டி பொது மன்னிப்பு வழங்க சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு தென் கொரிய அமைச்சரவை எதிர்வரும் செவ்வாயன்று அங்கீகாரம் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1979 ஆம் ஆண்டு சதிப்புரட்சி ஒன்றுக்குத் திட்டம் வகுத்ததற்காகவும், 1980 ஆம் ஆண்டில் ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்களை பலாத்காரம் மூலம் அடக்கிய தற்காகவும் குற்றஞ்சாட்டப்பட்ட இந்த இரு முன்னாள் அதிபர்களும் 1995 இல் சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் ஜனாதிபதிப் பதவிக்கு வருமுன்னர் இராணுவ ஜெனரல்களாக விளங்கினர்.

(ஐ)

## ஜெயலலிதா அணியில் ராமதாஸ்

அ. தி. மு. க — பாரதீய ஜனதா கூட்டணியில் இணைந்து போட்டியிடுவது என்று பாட்டாளி மக்கள் கட்சி நேற்றிரவு முடிவு செய்தது.

அக்கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் இதனை அறிவித்தார்.

அ. தி. மு. க, பாரதீய ஜனதா, மறுமலர்ச்சி தி. மு. க, சுப்பிரமணிய சுவாமியின் ஜனதாக் கட்சியும் இக்கூட்டணியில் போட்டியிடவிருக்கின்றன.

(உ-3)

## ஐ.நாவுக்கு துணை செயலாளர்

ஐக்கிய நாடுகள் சபையின் பணிகளை சிறந்த முறையில் நிர்வகிக்க துணைப்பொதுச் செயலாளர் என்ற புதிய பதவியை ஐ. நா. பேரவை ஏற்படுத்தியுள்ளது.

பொதுச் செயலரின் பணிச் சுமையைக் குறைக்கும் வகையில் துணைச் செயலர் பணியாற்றுவார்.

ஐ. நா. பொதுச் செயலர் கோபி அனான் தெரிவித்த சீர்திருத்த யோசனைகளின் ஒரு பகுதியாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பதவியை ஏற்படுத்த உதவும் தீர்மானம் ஒன்றை 185 உறுப்பு நாடுகள் கொண்ட பேரவை நிறைவேற்றி உள்ளது. (ஐ)

# தென்கொரியாவில் கிம் டே யங் புதிய அதிபர்

சியோல், டிச. 21

**தென் கொரியாவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சியின் வேட்பாளர் கிம் டே யங் (Kim Dae Jung) வெற்றியீட்டியுள்ளார்.**

புதிய தென்கொரியாவின் வரலாற்றில் எதிர்க்கட்சி வேட்பாளர் ஒருவர் பதவிக்கு வருவது இதுவே முதல் முறையாகும்.

15 ஆவது அதிபர் தேர்தலில் மும்முனைப் போட்டி நிலவியது. ஆளும் தேசியக் கட்சியின் சார்பில் லீ ஹோய் செங்கும் [Lee Hoi Chang] —

பிரதான எதிர்க்கட்சியான புதிய அரசியலுக்கான தேசிய காங்கிரஸின் சார்பில் கிம் - டே - ஜங்கும் —

புதிய மக்கள் கட்சி சார்பில் ரீ - இன் - ஜீயும் (Rhee -In- Je) —

போட்டியிட்டனர்.

தென் கொரிய அரசமைப்பின் படி ஒருவர் இரண்டாவது தடவையும் அதிபர் பதவிக்குப் போட்டியிட முடியாது. அதன் படி தற்போதைய அதிபரான இம் - யங் - சேம் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை

தென் கொரிய பொருளாதாரம் மிக மோசமான நிலையை அடைந்துள்ள தருணத்தில் புதிய அதிபர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

பெரும்பாலான முடிவுகள் அவரது வெற்றியை உறுதி செய்ததும் தமது வாசஸ்தலத்துக்கு வெளியே கூடியிருந்த ஆதரவாளர்கள் மத்தியில் கிம் - டே - யங் உரையாற்றினார்.

ஜனநாயகமும், பொருளாதாரமும் கைகோர்த்து ஒரே பாதையில் நடந்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும். அந்த வெற்றிப்பாதையையே நான் தேர்ந்தெடுத்துள்ளேன் — என்று அவர் கூறினார்.

(ஐ)


## தாதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் வைத்திய சாலைக்குத் தாதி தேவை. பழக விரும்புவோரும் தபால் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

N. நவக்குமாரன்
68/ 2, இராசாவின் தோட்டம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(51938)

## வைத்தியம்

செங்கமாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
121, 2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

## WANTED

**An experienced Telephone Operator is required for an Organisation in Jaffna**

Applicant must be fluent in English. Retired people too are eligible to apply.

**Apply Within Five days.**

Advertiser:

**C/o UTHAYAN**
**361, Kasthuriyar Road, Jaffna.**

(C/2434)

## சமையற்காரர் தேவை

கொழும்பிலுள்ள தொழிலதிபர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்து சமையல் செய்வதற்கு ஆண் சமையற்காரர் தேவை. யாழ்ப்பாண முறைப்படி உணவு வகைகள் திறமையாக சமைக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். நான்கு நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

விளம்பரதாரர்:

மே/ பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-2437]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WE SERVE

# சர்வதேச லயன்ஸ் மாவட்டம் 306 B பிராந்தியக்

## பிராந்தியத் தலைவர் லயன் வே. தில்லைநாதனின் ஆசிச்செய்தி

எமது பிராந்தியத்தில் ''சேவை செய்வோம்'' என்ற உயர் இலட்சியத்துடன் சர்வதேச லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியடைந்து விட்டன. 73ஆம் ஆண்டில் வெள்ளவத்தை லயன்ஸ் கழகத்தினால் யாழ்ப்பாண லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்டதுடன் லயன்ஸ் சித்தாந்தம் வட பகுதிக்கு வந்தது இன்று எமது பிராந்தியத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட கொக்குவில் கழகத்துடன் 11 கழகங்கள் செயற்பட்டு வருகின்றன.

80 ஆண்டுகளுக்கு முன்னர் ஐக்கிய அமெரிக்க நாட்டின் சிக்காக்கோ நகரில் மெல்பின் ஜோன்ஸ் என்ற அந்த தீர்க்க தரிசியின் சிந்தனையில் மனிதனுக்கு மனிதன் சேவை செய்தல் என்ற எண்ணக் கரு உருவாகியதுடன் ஆரம்பமானது லயன்ஸ் சித்தாந்தம். இன்று இந்த ஸ்தாபனம் ஓங்கி வளர்ந்து உலகின் 185 நாடுகளில் வேரூன்றி உலகிலேயே மிகப் பெரிய சேவை ஸ்தாபனமாக மிளிர்கின்றது.

பிராந்தியத் தலைவர்கள் தங்கள் நிர்வாக அமைப்பிலுள்ள கழகங்களின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்து அவர்களை சேவையில் ஊக்குவிக்கும் நோக்குடன் நடைபெறுவதுதான் பிராந்தியக் கருத்தரங்கு.

இந்த வருடத்தின் பிராந்தியத் தலைவர் என்ற முறையில் எமது பிராந்தியத்தில் செயற்படுகின்ற கழகங்கள் அனைத்தும் மிகவும் சிறப்புற சேவையாற்றி வருவதைக்கண்டு நான் பெருமிதமடைகின்றேன். கடந்த 6 மாத



காலத்தில் எமது பிராந்தியம் சர்வதேச தலைவரினதும், மாவட்ட ஆளுநரதும் வேலைத் திட்டங்களைச் சிறப்புற அமுல்படுத்தி வருகின்றன. குறிப்பாக பார்வைக்கு முதலிடம் என்ற திட்டத்தினை

(ஆறாம் பக்கம் பார்க்க)

## பிராந்தியம் 8 இன் மாவட்டச் செயற் குழு

பிராந்திய ஆலோசகர் —
லயன் எஸ். தங்கராசா
தலைவர் பார்வைக்கு முதலிடம் —
லயன் க. தணிகாசலம்
தலைவர் தலைமைத்துவ அபிவிருத்தி —
லயன் எஸ். பத்மநாதன்
தலைவர் அங்கத்துவ அபிவிருத்தி —
லயன் டாக்டர். க. ரி. சிவபாதம்
தலைவர் கழக அபிவிருத்தி —
லயன் எஸ். பி. சிவஞானம்
தலைவர் அகதிகள் புனருத்தாரணம் —
லயன் எஸ். எஸ் இராமச்சந்திரன்
தலைவர் லியோ கழகங்கள் —
லயன் பி. தவபாலன்

## மெல்வின் ஜோன்ஸ் விருது

சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் வழங்கப்படுகின்ற உயர் விருதான மெல்வின் ஜோன்ஸ் விருதினை வட பிராந்தியத்தில் முதல் முறையாக இருவர் பெற இருக்கின்றனர். நல்லூர் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் த. சற்குணராஜா (சீமாட்டி), லயன் சு. செல்வரத்தினம் (விக்கினேஸ்வரா) ஆகிய இருவருமே இவ் விருதினைப் பெறுபவர்களாவர்.

லயன்ஸ் ஸ்தாபனத்தினூடாக இவர்கள் ஆற்றிய சேவைகளைப் பாராட்டும் முகமாகவும், லயன்ஸ் சர்வதேச நிதியமைப்பிற்கு இவர்கள் செய்த பங்களிப்பிற்காகவும் இந்த உயர் விருது வழங்கப்படுகிறது.

## சர்வதேச லயன்ஸ் கழகங்கள் ஓர் அறிமுகம்

உலகிலே மிக அதிக எண்ணிக்கையான உறுப்பினர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒரேயொரு சர்வதேச அரசசார்பற்ற சேவை அமைப்பாக லயன்ஸ் கழகங்கள் திகழ்கின்றன. அத்துடன் உலக மக்கள் மத்தியில் பெரும் மதிப்பையும், செல்வாக்கையும் பெற்றிருப்பது இக்கழகங்கள் ஆகும்.

''சேவை செய்கிறோம்'' (We Serve) என்ற கொள்கையை முன்னிலைப்படுத்தி, சமுதாயத்தின் பல தரப்பட்ட மக்களுக்கும் சேவையாற்றிவருவது இவ்வமைப்பாகும்.

1917 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 ஆம் திகதியன்று அமெரிக்காவைச் சேர்ந்த மெல்வின் ஜோன்ஸ் என்பவர் இக்கழகத்தினை முதன் முதலாக அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். அன்று மிகச் சொற்ப பேருடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகங்களின் அங்கத்தவர்களின் தொகை இன்று ஒரு கோடியையும் தாண்டியுள்ளது.

உலகிலுள்ள185 நாடுகளில் 43,736 லயன்ஸ் கழகங்கள் இயங்கிவருகின்றன, இக்கழகங்களில் இருந்து மக்கள் சேவையில் 1,417,896 உறுப்பினர்கள் சேவையாற்றி வருகின்றனர்.

எண்பது வயதினைப் பூர்த்தி செய்துள்ள சர்வதேச லயன்ஸ் கழகங்கள் அவற்றின் அடிப்படைப் பாரம்பரியத்தைப் பேணி, தமது சேவைத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

இப் பழம் பெருமை வாய்ந்த சேவை அமைப்பின் நிறுவனரான மெல்வின் ஜோன்ஸின்சிந்தனை — எண்ணம் — எதிர்பார்ப்புயாவும் ஒருங்கு சேர செயலாக்கம் பெற்று வருவதால் பல கோடானு



மெல்வின் ஜோன்ஸ்

கோடி மக்கள் பல்வேறு வகையில பயன் பெற்றுவருகின்றனர்.

இச்சர்வதேச அமைப்பின் தலைமைக் பணியகம் அமெரிக்காவிலுள்ள ஒக் புறூக் (Oak Brook) எனும் இடத்தில் அமைந்துள்ளது. இந்த அமைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி லயன்ஸ் கழகம்

எமது கழகம் 1995 இல் உருவாக்கப்பட்டது முதல் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றது. யுத்த நிலைமையால் பாதிப்புற்றோர் நிலைமையைக் கருத்திற் கொண்டு அவர்கட்கும், நலிவுற்றோருக்கும் உணவு, உடை மற்றும் பாவனைப்பொருள்களை வழங்கியது.

இடம் பெயர்ந்து வந்த இந்துக் குருமார், கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் போன்றோருக்கு வைத்திய சேவை, சத்துணவு, பிற அவசியப் பொருள்கள் என்பவற்றை வழங்கியது.

இலவச கண்சிகிச்சை, பொது வைத்திய முகாம் என்பவற்றை நடத்தி கண்பார்வை பாதிப்புற்றோருக்கு இலவச மூக்குக்கண்ணாடி போன்றவற்றை வழங்கியது.

சுய தொழில் உதவிகள், இலவச கல்வி போதனை போன்ற பலவித உதவிகளை அவசியமானோருக்கு வழங்கியது.

. 279 பேருக்கு கண்பரிசோதனைகள் நடத்தி 168 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டது.

பொது இடங்கள், பாடசாலைகளில் பொது வைத்திய முகாம், பற் சிகிச்சை என்பவற்றை ஒழுங்கு செய்து நடத்தியது.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, போசாக்கு என்பன தொடர்பான கருத்தரங்கு கண்காட்சிகளை நடத்தியது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

மலர் வடிவமைப்பு
லயன் எம்.கே.ஜீவகதாஸ்
லயன் பா.தவபாலன்

## சாவகச்சேரி லயன்ஸ் கழகம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் 1979 முதல் மக்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றது. எமது கழகம் சமுதாயத்தில் அடிமட்டத்து மக்களது பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் மிகவும் முனைப்புடன் சேவையாற்றி வருகின்றது.

பார்வைக்கு முதலிடம், கல்விப் புலமைப் பரிசில் திட்டம், இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான நிவாரண - புனர்வாழ்வுத் திட்டம், சுகாதார சிகிச்சைத் திட்டம், சமூகமேம்பாட்டுத் திட்டம், சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டம், மரம் நடுகைத் திட்டம் போன்ற செயற்றிட்டங்களை தென்மராட்சி, பளை பிரதேசங்களில் செயல்படுத்திவருகின்றது.

1. பார்வைக்கு முதலிடம் திட்டத்தின் கீழ் 226 பேருக்கு இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன.
2. பெற்றோரை இழந்த 20 மாணவர்களுக்கு மாதாந்தம் 200 ரூபா வீதம் உதவித்தொகை வழங்குதல்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகம்

மானிப்பாயில் கண்பரிசோதனை முகாம் மேற்கொள்ளப்பட்டு 110 பேருக்கு இலவசமாக பரிசோதனை செய்யப்பட்டது. அத்துடன் இரத்த அமுக்க பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. இலவசமாக 12 கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

மருத்துவம்

★ லயன் சீமாட்டிகளால் கர்ப்பிணித் தாய்மார்கள் 43 பேருக்கு சத்துணவு வழங்கப்பட்டது.

★ நீரிழிவு பரிசோதனை சனசமூக நிலைய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது:- போலியோ தடுப்பு நடவடிக்கையில் துண்டுப் பிரசுரம் / ஒலிபெருக்கி அமைப்பு மூலம் உதவி.

கல்வி வளர்ச்சி

க. பொ. த (உயர்), (சா / தர) மற்றும் 5 ஆம் ஆண்டு மாணவர்கள் எட்டுப் பேருக்கு தொடர்ச்சியாக புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. ஆண்டு

(9 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். லயன்ஸ் கழகம்

யாழ். லயன்ஸ் கழகம் வெள்ளவத்தை லயன்ஸ் கழகத்தினால் 10. 07 — 1973 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. எதிர்வரும் 10. 07 — 1998 இல் தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடவுள்ள யாழ். லயன்ஸ் கழகம், வவுனியா லயன்ஸ் கழகம், சாவகச்சேரி லயன்ஸ் கழகம், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம், முல்லைத்தீவு லயன்ஸ் கழகம், கிளிநொச்சி லயன்ஸ் கழகம், மன்னார் லயன்ஸ் கழகம், மாவிட்டபுரம் லயன்ஸ் கழகம், பருத்தித்துறைலயன்ஸ் கழகம், இன்ன கொழும்பு லயன்ஸ் கழகம் என்பவற்றினை ஆரம்பித்து வைத்துள்ளது.

மருத்துவசிகிச்சை :- மூன்று கண் சிகிச்சை முகாம் மற்றும் பற்சிகிச்சை முகாம், மருத்துவ சிகிச்சை முகாம் என்பன நடத்தப்பட்டன. 517 பேர் இதில் பயன்பெற்றனர். 10 பேருக்கு விழிப்படல சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆறு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

சர்வதேச தினங்கள் :- உலக லயன்ஸ் சேவைகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)


ஸ்பெஷல் ஐஸ்கிறீம், பாலுதா
ஏனைய ஐஸ்கிறீம் வகைகள்
றிக்கோ கிறீம் ஹவுஸ்
இல. 372, ஆஸ்பத்தி வீதி,
யாழ்ப்பாணம்.

சுத்தமான 22 கரட் தங்க நகைகளுக்கு
சாரங்கா நகை மாடம்
174/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தலைமை ஸ்தாபனம்!
அருள் முருகன் நகை அகம்
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம்!
சிவா நகை மாடம்
யாழ். வீதி, சாவகச்சேரி.

எமது நன்றி கலந்த புத்
சகல வகையான ருசி மிகு
குளிர்பானங்கள், கிற்
ராஜா கிறீ
36, கஸ்தூரி
யாழ்ப்பா

யாழ். நகரில் முன்னணி வகிக்கும்
பாதணி ஸ்தாபனத்தார்
யாழ். ரேட் சென்றர்
ஆஸ்பத்திரி வீதி,11, நவீனசந்தை,யாழ்ப்பாணம்.

நயம் நம்பிக்கை கணவுமுள்ள
தங்க வைர நகைகளுக்கு
புனிதா நகை மாடம்
239, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,

நாகரீக புடைவை வகைகள்
குடைகளுக்கு
அஜந்தாஸ்
இல. 54,மின்சார நிலைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன்ஸ் கழகங்கள்
## பிராந்தியம் 8 இன்
# கருத்தரங்கு

REACH OUT
1997/1998
DISTRICT 306 B
SRI LANKA

### சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 B அமைப்பு
**Multiple Council**

| மாவட்டம் | மாவட்டம் | மாவட்டம் |
|---|---|---|
| 306 ஏ | 306 பீ | 306 சீ |
| ஆளுனர் | ஆளுனர் | ஆளுனர் |
| | லயன் க. தில்லைநாதன் | |
| | பிராந்தியம் 8 | பிராந்தியம் 8 |
| | | ஆலோசகர் |

| | |
|---|---|
| பிராந்தியத் தலைவர் | |
| லயன் வே. தில்லைநாதன் | லயன் எஸ். எஸ். தங்கராஜா |
| வலயம் 1 | வலயம் 2 |
| வலயத் தலைவர் | வலயத் தலைவர் |
| லயன் ஐ. தங்கேஸ்வரன் | லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் |


| கழகங்கள் | கழகத் தலைவர்கள் |
|---|---|
| 1. நல்லூர் | லயன் ஜி. இராமச்சந்திரன் |
| 2. வடமராட்சி | லயன் ஏ. சிவசுவாமி |
| 3. சுன்னாகம் | லயன் ஏ. நல்லதம்பி |
| 4. வட்டுக்கோட்டை | லயன் ஏ. தர்மகுலசிங்கம் |
| 5. மன்னார் | லயன் எஸ். யு. சந்திரகுமரன் |

| கழகங்கள் | கழகத் தலைவர்கள் |
|---|---|
| 1. யாழ்ப்பாணம் | லயன் எஸ். என். கதிரவேலு |
| 2. சாவகச்சேரி | லயன் பா. விஜயகுமார் |
| 3. மானிப்பாய் பரிஷ் | லயன் எஸ். ஞானராஜா |
| 4. கோப்பாய் | லயன் பி. விக்கினேஸ்வரலிங்கம் |
| 5. வவுனியா | லயன் எஸ். ஸ்ரீதரன் |
| 6. கொக்குவில் | லயன் எம். எஸ். விஸ்வலிங்கம் |



லயன்
ஐ. தங்கேஸ்வரன்
வலயத் தலைவர் - 1

காலம்
**21 - 12 - 1997**
ஞாயிறு
நேரம் 9 மணி
இடம்
யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபம்



லயன் டாக்டர்
S.S. அருளானந்தம்
வலயத் தலைவர் - 2

### மாவட்டம் 306B, மாவட்ட ஆளுநர்
## லயன் க. தில்லைநாதன் அவர்களின் ஆசிச்செய்தி

எமது மாவட்டத்தின் பிராந்தியம் —8இன் பிராந்தியக் கருத்தரங்கு, பிராந்தியத் தலைவர் லயன். வே. தில்லைநாதனின் ஏற்பாட்டில் சிறப்பாக நடை



பெறவுள்ளமை குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த ஆறு மாத காலத்தில் இப் பிராந்தியத்திலுள்ள லயன்ஸ் கழகங்கள் ஆற்றிய சேவைகளை மதிப்பீடு செய்து, எதிர்வரும் ஆறு மாதகாலத்தில் செய்யப்படவேண்டிய செயல்திட்டங்கள் பற்றிய திட்டமிடுதலை மேற்கொள்கின்றகளமாக பிராந்தியக் கருத்தரங்கு அமையும்.

யுத்த சூழ் நிலையின் மத்தியில் பல் வேறு சிரமங்கள், அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தும், இங்கே இருக்கின்ற சகல கழகங்களும் மிகவும் பயனுள்ள, பெறுமதிமிக்க, காத்திரமான சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றன என்பதை நான் அறிவேன்.

குறிப்பாக, சர்வதேச லயன்ஸ் கழகங்களின் வேலைத்திட்டங்களாகிய கண்பார்வைக்கு முதலிடம், தலைமைத்துவம் போன்றவற்றில் இங்குள்ள கழகங்கள் நல்ல சேவைகளை ஆற்றி வருகின்றன.

மேலும், வட பிராந்தியத்தில்
(6ஆம் பக்கம் பார்க்க)

### அதிஉயர் சேவைக்கான லயன்ஸ் விருது பெறுகின்றார்
## வைத்திய கலாநிதி எஸ். குகதாசன்

இன்று யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறும் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் பிராந்திய மகா நாட்டில் யாழ். போதனா வைத்திய சாலையைச் சேர்ந்த கண் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். குகதாசன் அவர்கள் லயன்ஸ்கழகத்தினால்
(9 ஆம் பக்கம் பார்க்க)

## லியோ கழகங்கள் சேவை பிராந்தியம் 8

1957 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆந் திகதி 35 அங்கத்தவர்களுடன் கிறென்சைட் பென் சில்வேனியா லயன்ஸ் கழகத்தால் ''அபிங்டன் மேல் நிலைப்பள்ளி'' யில் முதலாவது லியோ கழகம் தோற்றுவிக்கப்பட்டு இவ்வாண்டு 40ஆவது வருடத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு பலம் பெற்ற சேவைக் கழகமாகவும் 'இளந் தலைமுறைகள் முன்னேறும் வகையில் ''தலைமைத்துவம்'' ''அனுபவம்' 'சந்தர்ப்பம்'' என்பவற்றைப்போதிக்கும் கழகமாகவும் லியோ கழகங்கள்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## கண்பார்வைக்கு முதலிடம் கொடுக்கும் செயற்திட்டம்

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் உலக நாடுகளில் குருட்டுத்தன்மை அதிகரிப்பதை உணர்ந்து 1990 ஆம் ஆண்டில், கண்பார்வைக்கு முதலிடம் கொடுக்கும் திட்டத்தை விரிவுபடுத்தி மிக்க அக்கறையுடன் செயற்பட்டன.
(9 ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாய் லயன்ஸ் கழகம்

எமது கழகத்தின் முன்னைய தலைவரான டாக்டர் வை. தியாகராசா குருநகரில் அமைந்துள்ள அகதிகள் முகாமில் உள்ளோருக்கு இலவச வைத்திய சேவையினை தினமும் ஆற்றி வருகின்றார். 1997ஆம் ஆண்டு ஆடி மாதம் முதல் கார்த்திகைமாதம் வரை கிட்டத்தட்ட 10,000 நோயாளர்களுக்கு இச்சேவை வழங்கப்பட்டுள்ளது.

பின்வரும் பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான ஊக்கிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

1. யாழ். இந்துக்கல்லூரி
2. யாழ். மத்திய கல்லூரி
3. யாழ். இந்து மகளிர் வித்தியாலயம்
4. கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி
5. அச்சுவேலி மகாவித்தியாலயம்
6. வசந்தபுரம் பாலர் பாடசாலை
7. கல்வியங் காடு காசிப்பிள்ளை மகாவித்தியாலயம்
8. ஆவரங்கால் விங்கம் பாலர் பாடசாலை

கோப்பாயில்225பேர் கண்பரிசோதனைக்குஉட்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் லயன்ஸ் கழகம்

கடந்த வருட இறுதிப் பகுதியில் தாய், சேய் உயிர்காப்பு நிதியுதவி வேண்டி, கோரிக்கை ஒன்று எமது கழகத்திற்கு வந்தபோது சம்பந்தப்பட்டவர்கள் சித்தங்கேணியைச் சேர்ந்தவர்களாதலால், மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தை அணுகும்படி அறிவுறுத்தினோம். மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் அதற்கான நடவடிக்கையை இந் நடப்பாண்டில் செயற்படுத்த முன்வந்த போது எங்கள் கழகம் ரூபா 40,000 (நாற்பது ஆயிரம்) சேகரித்து இச் செயற்பாட்டுக்கு வழங்கியுள்ளது. இச்செயற்பாடு வறுமைக் கோட்டுக்குள் அடங்கிய ஒருகுடும்பத்தின் உயிர்க்காப்பு உதவிக்காக வழங்கப்பட்டுள்ளது.

இந்நாட்டு சூழ்நிலை காரணமாக கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை கால்களை வழங்கும் சேவையை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். விழிப்புலன் செயல் திட்டத்தின் கீழ் 45 கண் பார்வை குறைந்தவர்களுக்கு மூக்கு கண்ணாடிகளை இலவசமாக வழங்கியுள்ளோம் கட்புலனற்ற இரண்டு குடும்பங்களுக்கு சுயதொழில் மேம்பாட்டுக்காக
(6 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகம் லயன்ஸ் கழகம்

- துர்க்கா மகளிர் இல்லத்துக்கு ரூபா 5,000/- வழங்கப்பட்டமை.
- வறுமைக்கோட்டின் கீழ்வாழும் யா/யூனியன் கல்லூரி மாணவர் ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு செய்யப்பட்டமை.
- சிறுவர்களுக்கு தெருப் பாதுகாப்பு அறிவுரை வாகன காவல்துறையினரால் வழங்கப்பட்டதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டமை.
- யா/மல்லாகம் மகாவித்தியாலயத்திற்குகுப்பை போடுவதற்கான தகர பீப்பா அன்பளிப்புச் செய்யப்பட்டமை.
- திருமணப் பதிவின்றி வாழ்ந்த 40 குடும்பத்தினருக்கு திருமணப்பதிவு செய்யப்பட்டு திருமணச் சான்றிதழ் வழங்கப்பட்டமை.
- வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி கண் பார்வையற்றவர்களுக்கு வெள்ளைப்பிரம்பு வழங்கப்பட்டமை.
- சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி அரசினர் முதியோர் இல்லத்திற்கு சமையற்

(6ஆம் பக்கம் பார்க்க)


...புத்தாண்டு வாழ்த்துக்கள்
...மிகுந்த ஐஸ்கிறீம் வகைகள்,
...ற்றுண்டி வகைகளுக்கு
...றீம் ஹவுஸ்
...ாரியார் வீதி,
...பாணம்.

நாகரிகமான புடைவை வகைகளுக்கு
சாந்தி புடைவை அகம்
157, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

பிஸ்கற், ரொபி, கேக் தயாரிப்புகளுக்கு
நாடவேண்டிய இடம்
குபேரன் களஞ்சியம்
358 - 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

...கள், கோயில் பட்டுக்கள்,
...து நாடுங்கள்.
...ரெக்ஸ்ரைல்
...லய வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். நகரில்
சிறந்த புகைப்பட வீடியோ கலையகம்.
அஜந்தாஸ் போட்டோ
சங்கிலியன் வீதி, நல்லூர்,

யாழ். நகரில் மூக்குக் கண்ணாடி வழங்குவதில்
முன்னணி வகிப்போர்
எஸ். எம். பெர்னான்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச லயன்ஸ் கழகங்கள்

## மாவட்ட 306B பிராந்தியம் 8 இன் பிராந்திய கருத்தரங்கு

(நான்காம் பக்கத் தொடர்)

### நல்லூர்...

அவர்கள் மேற்கொண்டிருக்கும் தொழிலுக்கேற்ப 2000 ரூபா பெறுமதியான பொருள்களை அன்பளிப்பாக வழங்கியிருக்கின்றோம்.

எமது கழகத்தின் கடந்த வருட தலைவர் லயன் ஐ. தங்கேஸ்வரன் அவர்களுடைய அயராத முயற்சியால கழகத்தின் பெயரில் வங்கியில் 75,000 ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இவ் வைப்பிலிருந்து கிடைக்கும் மாதாந்த வட்டி ரூபா 750 கண்பார்வை குறைந்த யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த தந்தையை இழந்த மாணவி ஒருவருக்கு வழங்கப்படுகின்றது. எமது கழக உறுப்பினர்களாகிய Dr. பொ. பரம்சோதி, மற்றும் Dr. க. பிரதீகுமார் ஆகியோரின் முயற்சியால் நீரிழிவு, இரத்தஅழுத்தம் மற்றும் கண்பார்வைக் குறைபாடு ஆகிய நோய்களினால் பீடிக்கப்பட்டிருப்பவர்களை இனங் காணும் பொருட்டு 200 வயது வந்தவர்களும், 250 மாணவர்களும் பரிசோதிக்கப்பட்டார்கள.

இனங்கண்ட நோயாளர்களுக்கு தேவையான மருந்து வகைகளையும் ஏனைய உதவிகளையும் எமது சழகம் வழங்குகின்றது. மேற்குறிப்பிட்ட சேவைகள வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கே வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சேவைகளை கழக அடிப்படையில் அமுல்படுத்தும் போது எமது கழகத்தின் கடந்த ஆண்டு பொருளாளராகவும், இவ்வாண்டு செயலாளராகவும் கடமையாற்றும் லயன். சற்குணராசா சர்வதேச லயன் கழக நிதி அமைப்புக்கு (LCIF) முதன் முதலாக எமது பிராந்தியத்தில் இருந்து 1000 அமெரிக்க டொலர்களைப் பங்களிப்பு செய்து MELVIN JONES FELLOWSHIP விருதைப் பெற்றுள்ளார். இவரைப் பின்பற்றி எமது கழக உறுப்பினர் லயன் S. S. செல்வரட்னம் அவர்களும் மேற்கூறிய அமைப்புக்கு 1000 அமெரிக்க டொலர்களைப் பங்களிப்புச் செய்து MJF விருதைப் பெற்றுள்ளார்.

இந்த இரண்டு சழக MJF உறுப்பினர்கள் எமது கழகத்திற்கு மட்டுமல்லாமல் எங்கள் மாவட்டத்தில் 25 வருட லயன் கழகச் சேவையைப் பூர்த்தி செய்யும் இந் நடப்பாண்டில் வரலாறு படைத்தவர்களாகத் திகழ்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதுமாக அமைகின்றது.

லயன்ஜீ. இராமச்சந்திரன்
தலைவர்.

### சாவகச்சேரி...

3. சட்டப்படி பதிவுத் திருமணம் செய்யாத 5 சோடிகளுக்கு பாலாவியில் பதிவுத் திருமணம் செய்யப்பட்டது.

4. வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த 60 குடும்பங்களுக்கு தலா 500 ரூபா பெறுமதியான குசினிப் பாத்திரங்கள் வழங்கியது.

5. 710 பேருக்கு நீரிழிவு, இரத்த அழுத்தப் பரிசோதனை, வாய்ப் புற்று நோய் பரிசோதனை செய்யப்பட்டது.

எமது கழகத்தில் 40 அங்கத்தவர்கள் உள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒரு முக்கிய சேவைக் கழகமாக எமது கழகம் உள்ளது.

லயன். பா. விஜயகுமார்
தலைவர்.

### சுன்னாகம்...

பாத்திரங்கள், உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டமை.

❈ எமது கழக அனுசரணையுடன், கண் சிகிசுசை யாழ். அரசினர் கண் வைத்திய பிரிவைச் சேர்ந்த நிபுணர் டாக்டர் எஸ். யோகநாதன் அவர்களாலும் அவரது சகாக்களினாலும் மேற்கொள்ளப்பட்டமை, இதில் 121 பேருக்கு கண்பரீட்சை மேற்கொள்ளப்பட்டு 24 பேர்கள் 'கற்றாக்ற்' கண்டுபிடிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

❈ உலக சமாதான தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சித்திரப்போட்டி நடத்தப்பட்டு முதல் மூன்றிடத்தைப் பெற்ற சித்திரங்கள் கண்காட்சிக்கும் மாவட்டப் போட்டிக்கும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டமை அம் மூவருக்குமான பரிசில்களும் வழங்கப்பட்டமை.

❈ வறுமைக் கோட்டின் கீழ் வாழும் விதவைப் பெண் மூவருக்கு கபமுயற்சித்திட்டத்தின் கீழ் செயற்படுவதற்காக தலைய ரூபா 7500/- வீதம் வழங்கபபட்டுள்ளன.

❈ விவசாயம் சம்பந்தமான விரிவுரை யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனத்தின் அதிபர், லயன் ரீ. குகதாசன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டமை.

லயன். ஏ. நற்குணநாதன்
செயலாளர்.

### பிராந்திய...

தீவிரமாக அமுல்படுத்தி வருகின்றன.

கடந்த 25 வருட கால கழகசரித்திரத்தில் முதன் முறையாக பிராந்தியத்தில் இவருக்கு மெல்வின் ஜோன்ஸ் அதியுயர் விருது கிடைத்துள்ளது. மாவட்டத்திலேயே இந்த வருடத்தில் முதல் புதிய கழகமாக கொக்குவிலில் அமைக்கப் பட்டிருக்கிறது. எமது பிராந்தியத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு என்னுடன் உறுதுணையாகவலயத் தலைவர்கள், லயன் தங்கேஸ்வரனும், லயன் அருளானந்தமும் செயலாற்றி வருகின்றனர். இவர்களுடன் எமது பிராந்தியத்தில் மாவட்டத் தலைவர்கள் எம் மருடன் ஆலோசகருமாக செயற்படுவதனால் எனது பணி மிகவும் இலகுவாக அமைந்துள்ளதுடன் இலக்கினையும் அடைந்துள்ளோம்.

எமது பிராந்தியம் முழுவதிலும் பரந்துள்ள 300-க்கும் மேற்பட்ட லயன்ஸ் உறுப்பினர்களினதும் அவர்தம் சீமாட்டிகளது ஆதரவும் பல வழிகளில் எமக்கு உதவி வரும் மக்களின் பேராதரவும் இப்பொழுது கிடைப்பதுபோல் தொடர்ந்தும் எமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அடுத்த அரையாண்டுக்கான எமது சேவைத் திட்டங்களைத் திட்டமிட்டு அமுல்படுத்துவோம் என உறுதி செய்வோம்.

மேலும், எமது பிராந்தியக் கருத்தரங்கில் மாவட்ட ஆளுநர் லயன் க. தில்லைநாதனும் அவரது லயன் சீமாட்டியும் பிரதம விருந்தினர்களாக வருகை தருவது எமக்கு மாவட்ட மட்டத்தில் கிடைக்கின்ற ஆதரவுக்கு மெருகூட்டுவதாக அமைந்துள்ளது.

லயன். வே. தில்லைநாதன்
பிராந்தியத் தலைவர்
பிராந்தியம் 8

### யாழ்,..

தினம், சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம், ஐ. நாடுகள் தினம் என்பனவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

கல்வி :- யாழ். பல்கலைக் கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில், இலவச ஆங்கில வகுப்பு, மாணவர்களுக்கானபாதணிவரங்கல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன

கருத்தரங்குகள் :- 'நீரிழிவு நோய்', ''எமது பிரதேச சூழலியற் பிரச்சினைகளும் அவற்றை வெற்றி கொள்வதற்கான ஐ. நாவின் பங்களிப்பும்'', ''தமிழிலக்கிய பரப்பில் தலைமைத்துவத் தராதரங்களும் சேவைத் தலைமைத்துவமும்'', ''தமிழர் பாரம்பரியத்தில் சேவையும் லயன்ஸ் குறிக்கோளும்'', ''லயன்ஸ் வரலாற்றில் தலைமைத்துவம்'' என்னும் தலைப்புக்களில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

லயன் சி. ந. கதிர்வேலு
தலைவர்

### மாவட்டம்...

லயன்ஸ் கழகங்களின் செயற்பாடுகள் கடந்த 25 வருடங்களாக நடைபெற்று வருகின்றன. இருந்த போதிலும் இந்த வருடம் முதல் முறையாக சர்வதேச லயன்ஸ் கழகங்களினால் வழங்கப்படுகின்ற அதி உயர் விருதான மெல்வின் ஜோன்ஸ் விருது இந்த வருடம் இரு உறுப்பினர்களுக்குக் கிடைத்துள்ளமை குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அதே வேளை, 306 பி மாவட்டத்தில் இவ் வருடம் முதல் தடவையாக ஒரு புதிய கழகம் கொக்குவிலில் உருவாக்கப்பட்டுள்ளது. இது இப்பிராந்தியத்தின் செயற்பாடுகளில் மற்றுமொரு முக்கிய அம்சமாகும்.

லயன்ஸ் கழகங்களின் செயற்பாடுகள் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட வேண்டுமானால், உறுப்பினர்கள் மட்டும் வழங்குகின்ற நிதி ஆதரவுபோதுமானதாக இருக்காது. பொது மக்களது நிதி ஆதரவு பெருமளவு தேவை, இந்த வகையில் இப்பிராந்தியத்தில் இருக்கின்ற மக்கள் லயன்ஸ் கழகங்களின் சேவைத்திட்டங்கள் அதிகரிக்க தம் ஆதரவை வழங்கி ஊக்குவிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இன்றைய பிராந்தியக் கருத்தரங்கு அதன் இலக்கினை அடைய எனது ஆசிகளையும் பாராட்டுக்களையும் வழங்குவதில் மன நிறைவு கொள்கின்றேன்.

லயன் க. தில்லைநாதன்
மாவட்ட ஆளுநர் 306. பி

### கோப்பாய்...

படுத்தப்பட்டு அதில் 40 பேர் சத்திரசிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் மூக்குக் கண்ணாடி வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் 50 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

அச்சுவேலியில் 4 பாடசாலைகளிலும், கோப்பாய் பகுதியில் 4 பாடசாலைகளிலும் மொத்தம் 900 மாணவர்கள் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவக் கல்லூரி மாணவர்களின் உதவியுடன் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

முதியோர் வாரத்தின் போது கைதடி முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களை, மருத்துவக் கல்லூரி மாணவர்களின் உதவியுடன் மருத்துவ பரிசோதனை செய்வித்து, நீரிழிவு நோயாளர்களும், இரத்த அழுத்தம் உடையவர்களும் வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கோப்பாய் பிரதேச செயலரினால் நடத்தப்பட்ட முதியோர். சிறுவர் தினங்களில் 32 முதியோர்களுக்கும், 13 பாடசாலை சிறுவர்களுக்கும் அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன.

போலியோ தடை ஊசி குழந்தைகளுக்கு வழங்கப்பட்டபோது, அதற்கான ஒத்துழைப்புக்களை எமது கழகம் வழங்கியது.

கோப்பாய் வைத்திய சாலையில் நடத்தப்பட்டசிரமதான வைபவத்தில் பங்கு கொண்டு சிரமதானப் பணியினை ஆற்றியுள்ளது.

லயன்
பொ. விக்னேஸ்வரலிங்கம்
தலைவர்.

### வடமராட்சி...

வளர்ந்தோருக்கான கல்வியறிவூட்டல் வகுப்புக்கள் துன்னாலையில் நடத்தப்பட்டது.

வல்லிபுரம் ஆலயச் சுற்றாடல் பகுதியில் 1000 பனை விதைகள் நட்டமையும், சுற்றாடல் சுத்திகரிப்பு பணிகளில் கலந்து கொண்டமை.

கண்பார்வை யற்றோர்க்கு உடைகள், சுய தொழில் செய்ய பணம், கால் நடை என்பன வழங்கியமை.

மந்திகை ஆதார வைத்தியசாலையின் மன நோயாளர்களுக்கு மதிய போசனம் இரண்டு நாள்கள் வழங்கப்பட்டமை.

வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டமை,

முதியோர், சிறுவர் விழிப்புலனற்றோர் என்போரைச் சிறப்பித்தும் உதவு பணியை அவர்கட்குரிய சர்வதேச தினங்களில் வற்புறுத்தி கருத்தரங்கு வைத்தியசிகிச்சை என்பன நடத்தியமை.

19 பேருக்கு விழிவெண்படல சத்திரசிகிச்சை செய்யப்பட்டு 9 பேருக்கு (Intra Occular Lens) கண்ணாடி வில்லைகள் பொருத்தப்பட்டமை.

ஆ. சிவசுவாமி
தலைவர்,
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

### சர்வதேச..

பின் நிர்வாக முகாமையை சர்வதேச மட்டத்தில் செயற்படுகின்ற நிர்வாகிகள் கண்காணித்து வருகின்றனர்.

இந்தநிறுவனம் 'தலயன்' எனும் பெயரில் 19 மொழிகளில் மாதாந்த சஞ்சிகையை அச்சிட்டு, கழகங்களில் அங்கத்துவம் பெற்றுள்ளவர்களுக்கு இலவசமாக அனுப்பி வருகின்றது,

மேலும் LCIF எனும்சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சர்வதேச நிதியம் ஊடாக உலகின் பல நாடுகளிலும் பல்வேறு விதமான சேவைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வமைப்பு ஐக்கிய நாடுகள் சபையுடன் மிக நெருங்கிய உறவை வளர்த்துக் கொண்டு வருகின்றது. வருடா வருடம் கழகத்தின் தலைவர்கள் ஐக்கிய நாடுகள் சபைக்கு விஜயம் செய்து உறவுப் பாலத்தை விருத்தி செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகிலுள்ள ஏனையசேவை அமைப்புகளுடன் இக்கழகம் நல்ல உறவுகளையும் தொடர்புகளையும் ஆழமாக்கி வருகின்றது அதன் மூலம் சேவையில்போட்டி, பொறாமைக்கு இடம் கொடாது பணியாற்றி வருகின்றது.

மேலும், இளைய தலைமுறையினர் மத்தியில் சேவை மனப்பான்மையை ஊக்குவித்து வளர்க்கும் பொருட்டு ''லியோக் கழகம்'' எனும் இளைய அமைப்பினையும் சர்வதேச லயன்ஸ் கழகங்கள் வழிநடத்தி வருகின்றன என்பது கவனத்தில் கொள்ளப்

( 9 ஆம் பக்கம் பார்க்க)

### அதி உயர் சேவைக்கான...

கௌரவிக்கப்பட்டு அதி உயர் சேவைக்கான பிராந்திய விருதினைப் பெறுகின்றார். இவ்விருதினை சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி ஆளுநர் லயன் க. தில்லைநாதன் அவர்கள் வழங்கிக் கௌரவிப்பார்.

இன்றைய கால கட்டத்தில் யுத்தச் சூழ்நிலை காரணமாக வைத்திய நிபுணர்களும், வைத்திய அதிகாரிகளும் வட பகுதியில் சேவை செய்ய மறுத்து வருவது உலகறிந்த விடயம். எனினும் சேவை மனப்பான்மை கொண்ட நிபுணர்களும், அதிகாரிகளும் இல்லாமல் இல்லை. குறிப்பாக கண் வைத்தியத்துறையில் நிபுணத்துவம் பெற்ற வைத்திய கலாநிதி எஸ். குகதாசன் அவர்கள் தொடர்ந்து யாழ் போதனா வைத்தியாசலையிலேயே கடமையாற்றி வருவது போற்றுதற்குரியது. அவர் தம்கடமை உணர்வை - தியாக சேவையை வட பகுதி மக்கள் என்றும் மறந்து விடமுடியாது.

போதனா வைத்திய சாலைக்கு ''கிளினிக்'' நாள்களில் கண் சிகிச்சைக்காகத் திரண்டு வருகின்ற பெரும் எண்ணிக்கையிலான நோயாளர்களை கவனிப்பது மட்டுமல்லாமல், யாழ். மாவட்டத்திலுள்ள லயன்ஸ் கழகங்களின் வெளிக்கள சிகிச்சை முகாம்களில் இனங்காணப்பட்டு சத்திர சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குள் வருகின்ற அனைத்து நோயாளிகளுக்கும் திட்டமிட்ட முறையில சத்திரசிகிச்சை அளித்து குணப்படுத்தி வருவது இந்தப் பிரதேசத்து மக்களுக்கு ஒருவரப்பிரசாதமாகும்.

1989 முதல் இன்று வரை டாக்டர் குகதாசன் அவர்களால் சத்திரசிகிச்சை செய்யப்பட்ட நோயாளிகளின் விவரம் பின்வருமாறு:

| வருடம் | சத்திரசிகிசசை அளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை | கண்வழிப்படல சத்திரசிகிச்சை எண்ணிக்கை | லயன்ஸ்முகாமகளில் செய்த சத்திரசிகிச்சை எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1989 - 1997 09 - 12 - 97 வரை) | 6,727 | 4,677 | 280 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், டிச. 21

1996ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற பேராதனைப் பல்கலைக்கழக பொதுக்கலைமாணிப் பரீட்சை (வெளிவாரி) முடிவுகள் நேற்று முன்தினம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளியிடப்பட்டன.

இப்பரீட்சை முடிவுகள் வெளியாகாதகாரணத்தால், கடந்த மாதம் நடைபெற இருந்த — இவ்வாண்டுக்கான — பொதுக்கலைமாணி பரீட்சை இன்னும் நடத்தப்படாமல் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது (உ-4-7)


ENGLISH CLASSES

Eassy English With Grammar

பல பிரிவுகளாக ஆரம்பம்:

23 - 12 - 1997

★ ஆரம்பப்பிரிவு

ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரை

★ இடைநிலைப்பிரிவு

ஆண்டு 6 முதல் ஆண்டு 8 வரை

★ தொழில் புரிபவர்கட்கு

★ G. C. E. O/L பரீட்சையில் தோற்றியவர்களுக்கும் மற்றவர்க்கும்.

(I. A. B. Computer Basic Language, Radio Electronics வகுப்புகள் விரைவில் ஆரம்பம்)

விவரங்கட்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

29. 2 nd CROSS STREET, JAFFNA.

[51973]


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

### துஷியேந்திரன் தெய்வேந்திர ஐயர் (துஷி)

7 - 10 - 97இல் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது முருகனடி சேர்ந்த துஷியேந்திரனின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

இவரின் பிரிவால் வாடும் எமது சபையின் பொருளாளர் திரு. வி தெய்வேந்திர ஐயர் அவர்களுக்கும், அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்:

மேலும் இவருடன் அகால மரணத்தைத் தழுவிய கார்த்திகேயன் துரைரெத்தினம், கஜந்தன் கனகேந்திரன் ஆகியோரின் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவரும், உறுப்பினர்களும்,
தில்லையம்பலம் ஞாபகார்த்த
திருப்பணித் தர்மகர்த்தா சபை,
செல்வச் சந்நிதி,
தொண்டமனாறு.

(சி-2425)

## கண்ணீர் அஞ்சலி

பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீட முதலாமாண்டு மாணவி

### வேலினீ வல்லிபுரத்தின்

அன்புத் தந்தையார்

### நல்லதம்பி வல்லிபுரம்

அவர்கள் 1997 - 12 - 17 இல் காலமானதையிட்டு அவருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

விவசாயபீட தமிழ் மாணவர்கள்
பேராதனைப் பல்கலைக் கழகம்.

(சி/2424)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

(21 - 12 - 97)

08 - 11 - 97 அன்று அகால மரணமடைந்த எமது பாடசாலை மாணவர்களாகிய

### தெய்வேந்திரன் துஷியேந்திரன்

(பழைய மாணவன்)

### துரைரத்தினம் கார்த்திகேயன் (ஆண்டு 10)

### கனகேந்திரன் கஜந்தன் (ஆண்டு 9)

ஆகியோரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்,
யா/ தொண்டமனாறு
வீரகத்திப்பிள்ளை ம. வி.

(51984)

# ச. ச. நிலையம் இயங்குகிறது

சண்டிலிப்பாய், டிச. 21

பனிப்புலம் அம்பாள் சனசமூக நிலையமும் கிராம அபிவிருத்திச் சங்கமும் புனரமைப்பு செய்யப்பட்டு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நிலைய வாசிகசாலை பல வருடகால இடைவெளிக்கு பின்னர் இம்மாதம் தொடக்கம் மீண்டும் செயற்பட்டு வருகின்றது.

(ஐ-135)

# யுவதிகளுக்கு பயிற்சி

யாழ்ப்பாணம், டிச. 21

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் மகளிர் பிரதேச யுவதிகளுக்கெனப் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பித்துள்ளது.

இந்த வகையில் தையல், கேக்ஐசிங் வகுப்புகள் முதலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு தொகுதி யுவதிகள் பங்கு பற்றுகின்றனர். தொடர்ந்து கைப்பணிப் பயிற்சியும் அளிக்கப்படவுள்ளதாக இச் சங்கத்தின் செயலாளர் சு. ஸ்ரீகுமரன் தெரிவித்தார். (ஐ)

# ஜே.வி.பி. ஜனாதிபதியை சந்திக்கும்

கொழும்பு, டிச. 21

ஜனாதிபதியை சந்தித்துப் பேசுவதற்கு நேர ஒதுக்கீடு கோரி ஜே. வி. பி. அமைப்பு ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளது.

ஜே. வி. பி மீண்டும் ஆயுதம் ஏந்த முனைவதாகச் செய்திகள் வெளியாகி வருகின்றன.

இது தொடர்பான விளக்கம் அளிப்பதற்காகவே ஜனாதிபதியிடம் பேச நேர ஒதுக்கீடு கேட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

(ஐ - 21)

# நகை திருட்டில் ஈடுபட்ட இளைஞர் குழு சிக்கியது

கொழும்பு, டிச. 21

3 வார காலத்திற்குள் 11 தங்கச் சங்கிலிகளை கொட்டாஞ்சேனைப் பகுதியில் திருடிய ஐவர் அடங்கிய ஆயுதந்தரித்த தமிழ் இளைஞர் குழுவை குற்றத் தடுப்பு பொலீஸ் பிரிவினர் கடந்த ஞாயிறன்று கைது செய்தனர்.

இவர்களால் அபகரிக்கப்பட்ட சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலிகளும் கைப்பற்றப்பட்டன.

வீதிகளில் செல்லும் யுவதிகள் மற்றும் பெண்களிடமிருந்து தங்கச் சங்கிலிகளை அபகரிப்பது இவர்களது வழக்கம் என்றும் இந்தத் தமிழ் இளைஞர்கள் அதற்காகப் பயன்படுத்திய 3 முச்சக்கர வண்டிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

# அமைச்சரவையிலிருந்து சமசமாஜிகள் வெளியேறுவர்?

அமைச்சரவையில் இருந்து வெளியேறி வெளியில் இருந்து அரசுக்கு ஆதரவு வழங்குவது என லங்கா சமசமாஜ கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி விஞ்ஞான, ஆராய்ச்சி அமைச்சர் பேர்னாட் சொய்சா தனது அமைச்சர் பதவியை துறக்க முன்வந்துள்ளார் எனவும் — ஆனால் பிரதி அமைச்சரான அத்தாவுட செனிவிரத்ன மறுத்துவருகிறார் எனவும் — தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய செயற்குழுவின் முடிவை ஏற்க அத்தாவுட செனிவிரத்ன மறுத்தால் அவரை கட்சியில் இருந்து நீக்குவது என மத்திய செயற்குழுவிலுள்ள பெரும்பாலோர் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

# பண்டத்தரிப்பு -மாதகல் வீதி மதகு பலத்த சேதம்

பண்டத்தரிப்பு — மாதகல் பிரதான வீதியிலுள்ள பெரிய மதகு இடிந்து சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. இதனால் இவ் வீதி வழியாகப் பிரயாணம் செய்யும் வாகனங்கள், மிகுந்த சிரமப்பட்டே செல்ல வேண்டியுள்ளது. மதகு உடைந்து கீழே உள்ள வாய்க்காலை மூடியுள்ளதால் வாய்க்கால் தண்ணீர் அப்பால் செல்ல முடியாத நிலையில் தேங்கி நிற்கின்றது.

இந்த மதகை விரைவில் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ஐ-135)

# காங்கேசன் ஊழியர் கொடுப்பனவு

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியரின் டிசம்பர் மாதக் கொடுப்பனவு நாளை திங்கள் காலை 9 மணிக்கு கன்னாதிட்டியில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. (ஐ)

# வானம் தரையில் இறங்கியது

"இறங்கி போங்க"

இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ். குடா நாட்டின் மூலை முடுக்கெல்லாம் காணப்படும் வார்த்தைகள் இவை. நாளாந்த வாழ்வில் இவ் வார்த்தைகள் எமக்கு சிரமத்தையும், சலிப்பையும் தருகின்றன. ஆனால் சமயரீதியாக இந்த வார்த்தைகள் ஆழமான அர்த்தம் கொண்டவை.

கடவுளே இறங்கிப் போன ஓர் அற்புத நிகழ்வு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு நடந்தது. அந்த நிகழ்வை நினைவூட்டுவதுதான் இந்த கிறிஸ்து பிறப்பு விழாக் காலம்.

''கடவுள் வடிவில் விளங்கிய கிறிஸ்து கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பாகி'' இறங்கி வந்தார் என்று புனித பவுல் பிலிப்பியருக்கு எழுதிய தமது கடிதத்தில் விளக்குகிறார். [2: 6-7]

கிறிஸ்து பிறப்பு அகந்தையும், ஆணவமும் நிறைந்த இவ்வுலக கண்ணோட்டத்தின் உயர்வுத் தன்மையில் உள்ள பொய்மைகளைக் களைந்தெறிந்து. தம்மைத் தாழ்த்துவோர் உயர்த்தப்படுவர் என்ற புதிய பாடம் கற்றுத் தந்தது.

தற்பெருமையாலும், ''நான்'' ''எனது'' என்ற சுயநல மனநிலையாலும், ''யார் பெரியவர்'' என்ற போட்டி மனப்பான்மையாலும் இந்த உலகு அழிந்து கொண்டிருக்கிறது. கடவுள் நிலையில் இருந்து ...ாக இறங்கி வந்த இயேசுவும், தனது பிறப்பை எடுத்துக் கூறும் விவிலியப் பகுதிகளில் நாம் சந்திக்கும் ஏனைய இறை மனிதர்களும் எமக்கு கற்றுத்தரும் பாடம் ஒன்று தான்.

நமது அகங்காரம், தற்பெருமை, ஆணவம், பெரியவன் என்ற எண்ணம், சுயநலம், சுயவிளம்பரம், சுயவழிபாடு இவைகளில் இருந்து நாம் இறங்கி வந்து, எமது வாழ்வை பொது நலம் நிறைந்ததாக, பிறர்மட்டில் அக்கறை, அனுதாபம் உள்ளதாக மாற்ற வேண்டும் என்பதே அப்பாடமாகும்.

கடவுளின் தாயாகும் பேறு பெற்றவள் மரியாள், கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவள். ஆனால் தான் பெரியவள்— கடவுளின் தாய் என்ற வீராப்பு அவளிடம் இருக்க

## ஞாயிறு நற்பிரசாதம்

வில்லை. தான் கடவுளின் அடிமை என்ற மனநிலையே அவளிடம் இருந்தது. அவளது உறவினளான எலிசபெத்து என்பவள் முதிர்ந்த வயதில் கருவுற்று இருப்பதைக் கேள்விப்பட்டு அவளுக்கு உதவுவதற்காக அவள் வாழ்ந்த மலை நாட்டுப் பகுதிக்கு ஓடோடிச் செல்கிறாள். தனது உயர் நிலையைவிட்டு இறங்கிய கடவுளின் தாய் பணிவிடைக் காரியாகிறாள் திருவள்ளுவர் கூறுவது போல.

''யான் எனதுஎன்னும்செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்''

(துறவறவியல். 346)

இந்தத் தேவ அன்னையைப் போல எமது செருக்கை அகற்ற நாம் தயாரா?

மூவுலகையும் ஆளும் இறைவன் அடிமையாக மாட்டுத் தொழுவத்தில் தீவனத் தொட்டியில் வந்து பிறக்கு மளவுக்குத் தம்மைத் தாழ்த்தினார். இந்த மண்ணுலகிற்குத் தம்மை உட்படுத்தி, மண்ணின் மைந்தனாக, இந்த பூமியின் அனைத்து அவலமான வாழ்வுக்கும் தன்னைக் கையளித்தார். இடப்பெயர்வு, கொலைப்பயமுறுத்தல், வறுமை, சொந்த ஊரில் வாழமுடியாமை, பிறரின் ஏளனம், அவச்சொல் போன்ற எல்லா மானிட அவலங்களையும் எதிர்கொண்டு வாழ்ந்தார்.

மனிதனான தெய்வ மகன் இயேசு இன்றும் எமக்கு ஒரு சவாலாக இருக்கிறார். தெய்வம் தனக்குக் கீழ்ப்பட்ட மனிதனையும், அவன் வாழும் மண்ணையும் தேடி இறங்கி வந்தது. வானம் தரையில் இறங்கியது. நாங்கள் எந்த அளவிற்கு எங்கள் அயலார்க்கும், எமது மண்ணிற்கும் எம்மை அர்ப்பணித்தவர்களாயிருக்கிறோம். சுயநலமில்லாமல், கர்வமில்லாமல் எமது சக மனிதருக்கும், எமது மண்ணுக்கும் நாம் இறங்கிச் செல்லத் தயாரா?

சுயநலம், கர்வம், அகந்தை, சாதி—மத வெறி, பணச்செருக்கு, பழிவாங்கும் எண்ணம், லஞ்சம் போன்ற போலி வாழ்நிலைகளில் இருந்து இறங்கிச் சென்று, எனக்கும், என் அயலவர்களுக்கும், போராட்டத்தால் சிதைந்து போயுள்ள என் மண்ணுக்கும், என் சகதமிழ்ச் சகோதரங்களுக்கும் உண்மையுள்ளவனாக, அர்ப்பணம் செய்தவனாக நான் வாழத் தயாரா என்று ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். ★

அருட்திரு. றொகான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தேவையான அளவில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 40, கோயில்வீதி, யாழ்ப்பாணம்.
[51936]

நல்ல நிலையில உள்ள சாவி CF50, இரண்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு:17, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (51266)

## தேவை

ஐந்து பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு நாவலர் றோட், கண்டி றோட், யாழ். பஸ் நிலையத்தை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: வே. அருள்ஞான சுந்தரம், இல. 133, செம்மணி வீதி, (வெயிலுகந்த பிள்ளையார் கோயிலடி) நல்லூர், யாழ்ப்பாணம்.
(51967)

நல்ல நிலையில் உள்ள மின் சலவை இயந்திரம் (Washing Machine) தேவை. தொடர்பு கொள்ளும் முகவரி: 250, கோயில் வீதி (U.N.H C.R. அலுவலகம் முன்பாக) நல்லூர். (51977)

## சிங்களம்

எழுத்து / பேச்சுப் பயிற்சி முதல் க. பொ. த. (சா) 98/99 வரை கற்பிக்கப்படும் ஆரம்பம்:- 24-12-97 பி. ப. 4.00 ஆசிரியர்: T. சசாசேவன் English and Sinhala Classes, இல:46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
[51866]

## மணப்பெண்கள்

அப்போதிக்கர். வியாபாரி, (வயது 36), கிராமசேவகர் (30 வயது) ஆசிரியர் (35 வயது) ஆகியோருக்கு வசதியுடைய மணப்பெண்கள் தேவை. நேரடித் தொடர்பு: முத்துச்குமாரு செல்லப்பா, புன்னாலைக்கட்டுவன் தெற்கு- [51680]

## உடன் விற்பனை

ஒரு மாதம் வளர்ச்சி அடைந்த பிறிமா பிறவுண் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும், அழகிய பல இன கலர் வளர்ப்பு மீன்களும் (கோல்ட்பிஸ்) உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, மானிப்பாய். (51985)

## கல்வி

ஆங்கில இலக்கணம் கட்டுரை கடிதம் எழுதுதல், ஸ்போக்கன் இங்கிலிஷ் யாவும் தபால்மூலம் பயிற்றப்படுகிறது. விவரங்களுக்கு முத்திரையொட்டி சுயவிலாசமிட்ட நீள தபாலுறையுடன் தொடர்பு கொள்ளவும்: G.M J. Joseph, 76, Maha Veethiya, Negombo.
(51708)

## தவறிவிட்டது

இராசையா பரமேஸ்வரி என்பவரது தேசிய, விசேட அடையாள அட்டைகள் பிறவுண் றோட்டுக்கும் நாவலர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். 37/31, 1ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (51981)

**O/L**
**Yr. 10, 9 & 8**
**98 புலமைப் பரிசில்**
**Yr. 5**
ஆரம்பமாகியுள்ளது.
**SHAMROCK**
(51987)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக,
கல்வியியற்றுறை,
சிரேஷ்ட விரிவுரையாளர்
**திரு. க. சின்னத்தம்பி**
அவர்களின்

**அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும்**
நூல் வெளிவந்துவிட்டது.

பிரதிகளுக்கு...
1. நூலாசிரியர்,
2. பாரதி பதிப்பகம்,
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். [51944]

**SHORT HAND & TYPING CLASSES**
**தமிழ் & ஆங்கிலம்**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்: 01-01-1998**

பாடசாலை மாணவர்களுக்கும், தொழில் புரிபவர்களுக்கும் இலகுவாக மாலை 5-00 மணி வரை வகுப்புக்கள் நடைபெறும்.
(I. A. B., Radio Electronics, Computor Basic Language புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.)

விவரங்களுக்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
29, 2nd, CROSS STREET, JAFFNA.
(51974)

## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து) சுன்னாகம்

# முக்கிய அறிவித்தல்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தின் 01-08-96— 31-07-97 வரைக்கான வருடாந்த எண்பார்வை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இணுவில், சுன்னாகம், ஏழாலை, குப்பிளான் கிராமிய வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் சகல வாடிக்கையாளர்களும் தங்கள் கையேடுகளை (வங்கிப் புத்தகம்) பின் வரும் திகதிகளில் குறித்த கிராமிய வங்கியில் சமூகமளித்திருக்கும் எண்பார்வையாளர் மூலம் மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம். தங்களால் உரிய காலத்திற்குள் மீதிகள் உறுதிப்படுத்தப்படாவிட்டால் எமது மீதிகள் சரியானவை என உறுதி செய்யப்பட்டு மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறியத் தருகின்றோம்.

சுன்னாகம், குப்பிளான் கிராமிய வங்கிகள் 22-12-97, 23-12-97, 24-12-97.

ஏழாலை கிராமிய வங்கி 26-12-97, 27-12-97.

இணுவில் கிராமிய வங்கி 29-12-97, 30-12-97.

சி. குமரவேல்
தலைவர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
19.12.97 (சி/2417)

## தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் பெயரால்

# புலமைப்பரிசில் - 1998


1. சி. பிரதீபா ஆண்டு 10 (சிவப்பிரகாச வித்தியாலயம்- பருத்தித்துறை.)
2. சி. ராஜேஸ்வரி ஆண்டு 10 (சிவப்பிரகாச- வித்தியாலயம் பருத்தித்துறை.)
3. பா. சிவசங்கரி ] ஆண்டு 8 (வடமராட்சி-
4. அ. அபிராமி ] இந்துமகளிர் கல்லூரி.)
5. செ. தூர்சிகா (நடராஜா இராமலிங்கம்- வித்தியாலயம் ஆவரங்கால்.)
6. க. சிவாஜினி (பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை)
7. சு. கோகிலா ஆண்டு 10 (நெல்லியடி மகளிர் கல்லூரி.)

★ முக்கிய குறிப்பு:
தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 117 ஆவது ஜன்ம தினத்தில் 1969 ஆம் ஆண்டு 31 ஆம் திகதி டிசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது இப்புனித ஸ்தாபனம்.

- செயலாளர்

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை (சி/2414)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 17 | 21 |
| 03 | 11 |
| 1913 | 1997 |

**அமரர் விஸ்வநாதர் செல்வநாயகம்**
(பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை.)

அமரர் செல்வநாயகத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து சகல வழிகளிலும் உதவியவர்களுக்கு குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 21-12-97 ஞாயிற்றுக்கிழமை (இன்று) 10.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள், சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆசிரியர்கள், யா/ மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை ஆசிரியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.
பிரிவால் துயருறும்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மு. லோகநாதன்,
(மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்)
சங்கானை. (49879)


# BASF

**யாழ். விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி!**

# லாவின்

★ மிளகாய் ★ கௌபி ★ போஞ்சி போன்ற பயிர்களில் காய்துளை புழுக்களைக் கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப்பட்ட கிருமி நாசனி.
பயிர்களுக்கு நன்மை செய்யும் பூச்சி புழுக்களைத் தாக்கும் தன்மை குறைவானது.

புத்தம் புதிய
**பின்கெம் லாவின் பி.எ.எஸ்.எ(F)வ்.**
**நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**உழவர் களஞ்சியம்**
பலாலி வீதி, திருநெல்வேலி

**கமக்காரர் மாளிகை**
பிரதான வீதி, சுன்னாகம்.

**BASF - Finlay(pvt.) Ltd.,**
186, Vauxhall Street, Colombo- 2
(பீடை கொல்லிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவியுங்கள்)
(சி/2359)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## தொற்றுநோய்கள்

தென்மராட்சிப் பகுதியில் காய்ச்சலும், வயிற்றுளைவும் மிக வேகமாகப் பரவிவருகின்றன. இதனால் அந்தப் பிரதேசத்தின் பிரதான ஆஸ்பத்திரியாக விளங்கும் சாவகச்சேரி ஆஸ்பத்திரி நோயாளர்களால் நிரம்பி வழிவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது மழை காலம். இக்காலத்தில் மேற்சொன்ன இரண்டு வியாதிகள் மட்டுமன்றி வாந்திபேதியும் அதிக எண்ணிக்கையான மக்களைப் பாதிப்பது வழமை. எனினும் இவற்றைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள், உரிய நேரத்தில் எடுக்கப்படாவிடில் உயிரிழப்புகள் அதிகரிக்கும் ஆபத்து உருவாகும்.

இவ்வியாதிகள் தென்மராட்சிப் பகுதியில் மட்டும் தான் மக்களைப் பாதித்துள்ளன என்று மட்டுப்படுத்திக் கூற முடியாது. குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் இந்த நோய்கள் மக்களை வருத்தி வருகின்றன.

வயிற்றுளைவு, வயிற்றோட்டம், வாந்திபேதி என்பன பரவுவதற்கு — தொற்றுவதற்கு — தண்ணீரே பிரதான காரணி. ஆகையால் சுத்தமான கொதித்தாறிய நீரை அருந்தும் பழக்கத்தை மக்கள் தவறாது கைக்கொள்ள வேண்டும்.

மலேரியாவுக்கும் மழை நீருக்கும் நிரம்பிய சம்பந்தமுண்டு. மழை காலத்தில் நுளம்பு பெருகுவது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால் கோடை காலத்திலும் — வெயில் தக தக என்று சுட்டெரிக்கும் காலத்திலும் — நுளம்புத் தொல்லை தொடரும் நிலைமை குடாநாட்டிலும் வந்துவிட்டது. அதாவது வருடம் முழுவதும் நுளம்புக் கடி வாங்கி மலேரியாவைத் தேடிக்கொள்ளும் சூழல் உண்டாகியுள்ளது.

நுளம்பு ஒழிப்பு இயக்கம் குடாநாட்டில் பெரும் தோல்வி கண்ட நிலையிலேயே உண்டெனலாம். அதனாலேயே நுளம்பின் தாக்கம் — மலேரியாவின் தாக்கம் — அதிகமாக உள்ளது.

பல தசாப்தங்களுக்கு முன்னர் மலேரியா பெரும் உயிர்க்கொல்லி நோயாக உருவெடுத்து மக்களைப் பேரழிவு செய்தது. எங்கள் நாட்டில் மட்டுமன்றி உலகின் பல நாடுகளில் ஆயிரக்கணக்கில் மக்கள் மலேரியாவினால் மாண்டார்கள்.

அத்தகைய நிலை ஒன்று மீண்டும் உலகளாவிய மட்டத்தில் வரலாம் என்று சர்வதேச சுகாதார, வைத்திய வல்லுநர்கள் அண்மையில் எச்சரித்தனர். டி. டி. ரி, மலத்தியோன் மற்றும் தடுப்பு மருந்துகளை எதிர்க்கும் சக்தி நுளம்புகளுக்கு அதிகரித்திருப்பதாகவும், சம்பந்தப்பட்ட மருந்துகளுக்கு அவை இசைவாக்கம் பெற்றுவிட்டதே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகையால் நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கும் வகைகளில் சூழல் சுகாதாரத்தைப் பேணுவதில் தீவிரமான, பொதுவான அக்கறை காட்டப்பட வேண்டும். இதில் மக்களுக்கு அறிவுரை வழங்குவதோடு மட்டும் நிற்காமல் அரச திணைக்களங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் அக்கறையோடு செயற்பட வேண்டும்.

தொற்று நோய்கள் பெருகி ஆபத்தான நிலையை எட்டாமல் இருப்பதனைத் தடுப்பதில் குடாநாட்டில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கும் பெரும் பங்குண்டு.

ஆனால் அதற்கான சிகிச்சை வசதிகள், மருந்து வசதிகள், ஆஸ்பத்திரிகளில் உண்டா என்பது கேள்விக்குரியதே. யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையிலேயே இந்த வசதிகள் திருப்தி அளிக்கும் அளவுக்கு இல்லை என்பது நிச்சயம். அவ்வாறிருக்க ஆதார வைத்திய சாலைகளால் தொற்று நோய் பரவுவதைத் தடுக்க முடியும் என்றும் நம்பிக்கை கொள்ள முடியவில்லை.

# சிறிமாவோவுக்குப் பின்னர் பிரதமர் பதவி யாருக்கு?

## 2 அமைச்சர்களிடையே போட்டியாம்

கொழும்பு, டிச. 21

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் அடுத்த பிரதமர் பதவிக்கு அரசாங்கக் கட்சியின் உயர்மட்டத்தில் உருவாகியுள்ள போட்டி தற்போது தீவிரமடைந்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க உடல் நலம் காரணமாக பதவியைத் துறக்கவுள்ளார் என சமீபத்தில் வதந்திகள் பரவிய போதிலும் தான் பிரதமர் பதவியில் தொடரப் போவதாக சிறிமாவோ அறிவித்துள்ளார்.

இருப்பினும் அடுத்த பிரதமர் பதவிக்கு போட்டியிடும் அமைச்சர்கள் தற்போதே கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப்பெறும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும்—

இரு முக்கிய அமைச்சர்களிடையே போட்டி நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் பதவிக்கு அமைச்சர்களான அனுருத்த ரத்வத்த, லக்ஷ்மன் ஜெயக்கொடி, லக்ஷ்மன் கதிர்காமர், டி. எம். ஜயரத்தின, சபாநாயகர் கே. பி. ரத்னாயக்கா ஆகியோர் முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

## மலத்தியோன் விசிறும் பணி

செம்பியன்பற்று, டிச. 21

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று, மாமுனை, நெல்லியான், தனிப்பனை ஆகிய பகுதிகளில் நுளம்புகளைக் கட்டுப்படுத்த மலத்தியோன் தெளிக்கப்பட்டு வருகிறது. (ஐ-36)

## பளைக் கல்விக் கோட்டம் ஆசிரியர்கள் பற்றாக்குறை

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள அதேசமயம் பல ஆசிரியர்கள் தற்காலிக இடமாற்றம் பெற்றுச் செல்வதால் இப் பகுதி மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிப்படைவதாக தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்துச் சேவைகள் சீராக இயங்குகின்ற இக்காலகட்டத்தில் தற்காலிக இடமாற்றம் வழங்குவதை நிறுத்துமாறும்—

தற்காலிக இடமாற்றம் பெற்ற 17 ஆசிரியர்களையும் 1998 முதல் அந்தந்தப் பாடசாலைகளில் கடமையாற்றப் பணிக்குமாறும் — கல்விப் பணிப்பாளருக்கு பெற்றோரால் மகஜர் அனுப்பப்பட உள்ளது. (இ-117)

## லியோ கழகங்கள்...

(நான்காம் பக்கத் தொடர்)

லயன்ஸ் கழகங்களால் நெறிப்படுத்தப்படுகின்றன என்பது ஒரு வரலாற்றுச் சுருக்கமாகும்.

306 பி மாவட்டத்தில் பிராந்தியம் 8 இல் 12 லியோ கழகங்கள் பெருஞ் சேவையாற்றி வருகின்றன. யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தால் சென். ஜோன்ஸ் கல்லூரி லியோ கழகம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி லியோ கழகம், லியோ வட்டம்-யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி லியோ கழகம் ஆகிய 4 லியோ கழகங்களும் நல்லூர் லயன்ஸ் கழகத்தால் யாழ். மத்திய கல்லூரி, லியோ கழகம், வேம்படி மகளிர் கல்லூரி லியோகழகம், கொக்குவில் இந்துக் கல்லூரி லியோ கழகம் ஆகிய 3 லியோ கழகங்களும், மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தால் மானிப்பாய் லியோ கழகமும், சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி லியோ கழகமும், வடமராட்சி லயன்ஸ் கழகத்தால் வடமராட்சிலியோ கழகமும், சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் சாவகச்சேரி நகர லியோ கழகமும், மன்னார் லயன்ஸ் கழகத்தால் மன்னார் லியோ கழகமும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்த லியோ கழகங்கள் தமது சேவையில் இலவச கண் பரிசோதனை முகாம்களையும், இலவச நீரிழிவு, மருத்துவ பரிசோதனை முகாம்களையும், சிரமதான வேலைகளையும், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வோருக்கு இலவச புத்தகம், கொப்பி, பாடசாலைப்பை, உபகரணங்கள், உணவு வழங்குதலையும், இலவச கல்வி போதனைகளை மேற்கொள்ளுதலையும், விளையாட்டுப் போட்டிகளை நடத்துதலையும், ஊனமுற்றவர்களுக்கு உதவுவதையும் பாடசாலை, பொது இடங்களை சுத்தப்படுத்தல், பூந்தோட்டம் அமைத்தல் போன்றவற்றையும், மூக்குக்கண்ணாடி, செயற்கைகால் வழங்குதல், நோய் தடுப்பு பிரசுரங்கள் வெளியிடுதல், மாதாந்த பிரசுரங்கள், விலங்கு வேளாண்மையில் வறியவர்களுக்கு நிதி உதவி, விலங்கு வழங்குதல் போன்ற அளப்பரிய சேவைகளை 31 01.97 இல் இருந்து30.11.97 வரையான காலப்பகுதிக்குள் தத்தமது பகுதிகளிலும், பொருத்தமான பிற பகுதிகளிலும் ஆற்றி வருகிறார்கள். இதனால் பிராந்தியம் 8 இன் கீழ் உள்ள யாழ்ப்பாண மாவட்ட, மன்னார் மாவட்ட மக்கள் பெரும்பயனுற்றும் வருகிறார்கள்.

.இவர்களின் சேவையுடன் 1998ஜனவரிமாதத்தில்கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் லியோ கழகம்ஒன்றை அமைக்கும் பணியில் கோப்பாய் லயன்ஸ் கழகமும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் லியோ கழகம் அமைக்கும் பணியில் நல்லூர் லயன்ஸ் கழகமும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் லியோ, கழகம் அமைக்கும் பணியில் வடமராட்சி லயன்ஸ் கழகமும், மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் கல்லூரியில் லியோ கழகம் அமைக்கும் முயற்சியில் மானிப்பாய் பரிஷ் லியோ கழகமும், சாவகச்சேரி இந்து, சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் லியோ கழகம் அமைக்கும் முயற்சியில் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமைபிராந்தியம் 8 லயன்ஸ் கழகம் பொதுச்சேவையை லியோ கழகங்கள் மேன் மேலும் மெருகூட்டும் என உறுதியாக நம்புகிறேன்.

லயன் பா. தவபாலன்
லியோ கழகங்களுக்கான மாவட்டத் தலைவர்.

## கண்பார்வை..

(நான்காம் பக்கத் தொடர்)

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் இச்செயற் திட்டத்திற்கு அமைய, எங்கள் பிராந்தியத்தில் உள்ள கழகங்கள் கண் பார்வைக்கு முதலிடம் கொடுத்து பாரிய சேவைகளைச் செய்து வருகின்றன.

இப்பிராந்தியத்தில் நிலவி வந்த அசாதாரண சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டதால் இந்த ஐந்து மாத காலத்தில் மிகவும் முன்னேற்றம் காணப்படுகிறது.

எங்களுடைய இத் திட்டத்தின் வெற்றிக்கு கண் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் அவர்களதும் உடன் பணிபுரியும் ஏனைய உத்தியோகத்தர்களதும் செயற்பாடுகள் விதந்து பாராட்டப்பட வேண்டியதே.

கழகங்களின் வளர்ச்சிக்கும் செயற் திட்டங்களின் வெற்றிக்கும் எங்கள் பிராந்தியத் தலைவர் லயன் வி. தில்லைநாதனின் செயற்பாடுகளே முழுமையான காரணங்களாகும். நாட்டு நிலைமை, கழகங்களின் நிதி நிலைமை, மக்களின் தவிப்புக்கள் அனைத்தையும் தகுந்த முறையில் 306 பி லயன்ஸ் கழகங்களின் மந்திரி சபையில் முன்வைத்து அன்னாரின் பேச்சு வன்மை சொல் வன்மையால் எங்களுக்கு பெருமையையும், உதவிகளையும் தேடித்தந்துள்ளார்.

அத்துடன் எங்கள் மாவட்ட ஆளுநர் லயன் கே. தில்லைநாதனது முயற்சியாலும் மற்றும் சில சகோதர கழகங்களின் உதவியாலும்ஒருதொகை கண்ணாடிச் சில்லுகளைப் (INTRA OCU -LAR LENSES) பெற்று வசதி குறைந்த மக்களுக்கு உதவி வருகிறோம்.

இந்த ஐந்துமாத காலத்தில் (ஆடி 97 தொடக்கம் கார்த்திகை 97 முடிய)எங்கள் கழகங்களின் செயற்பாட்டைச் சுருக்கமாக கீழேதருகிறோம்.

1. கண்பரிசோதனை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 1334
2. மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 649.
3. கண் விழிப்படல சத்திர சிகிச்சைக்கு (CATARACT OPERATION) இனம் காணப்பட்டோர்142
4. கண் விழிப்படல சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 69.
5. கண்ணாடிச் சில்லுகள் (I.O L'S) பொருத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 43

லயன் க. தணிகாசலம்
மாவட்ட தலைவர்
கண்பார்வைக்கு முதலிடம்

## மானிப்பாய்...

(நான்காம் பக்கத் தொடர் )

ஐந்துக்குட்பட்ட மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள வழங்கப்பட்டன.

### புதிய கழக அமைப்பு/ அங்கத்துவ விருத்தி

22 அங்கத்தவர்களைக் கொண்டு புதியலயன்ஸ் கழகமாக ''கொக்குவில் லயன்ஸ் கழகம் அமைக்கப் பட்டது. அத்துடன் 20 சதவீத அங்கத்துவ விருத்தி மேற்கொள்ளப் பட்டது.

### மனிதாபிமான உயிர்காப்பு சேவைத்திட்டம்

குழந்தை விமல்ராஜ் மற்றும் அவரது தாயார் கனகலிங்கம் யோகேஸ்வரி ஆகியோரது இருதய சத்திர சிகிச்சைக்காக 4,25,000/- பொதுமக்கள் அமைப்புகள் மூலம் சேகரிக்கப்பட்டு, சத்திரசிகிச்சைக்காக ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

### சட்டபூர்வதிருமணப்பதிவு

சமயாசார முறைப்படி திருமணம் செய்த 25 தம்பதியருக்கு இலவசமாக சட்டபூர்வ திருமணம் செய்யப்பட்டது.

### முதியோாக்கான அன்பளிப்பு

சர்வதேச முதியார் தினம் அனுஷ்டிக்கப்பட்டு 25 முதியோர்களுக்கு உடுபுடைவை, படுக்கை விரிப்பு, சமையல் பாத்திரங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

### தொடர் சேவைத்திட்டம்

டென்மார்க்யூலண்ட தமிழ் இசைக் கலாசார ஒன்றியம் மூலமாகரூ71,266 ரூபா நிதி சேகரிப்பு.

லயன். [illegible]
தலைவர்

## சர்வதேச...

(ஆறாம் பக்கத்தொடர்)

படல் வேண்டியதாகும்.

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் வருடாந்தம் சர்வதேச வெண்பிரம்புத் தினம், ஐக்கிய நாடுகள் சபை தினம், நிறுவுநர் மெல்வின் ஜோன்ஸ் தினம், முதியோர் தினம், அங்கவீனர் தினம் போன்றவற்றை அனுஷ்டித்து வருகின்றன.

## புற்றுநோயாளர் கவனத்துக்கு

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மஹரகம ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறச் செல்பவர்களுக்கென ''இன்னர் கொழும்பு லயன்ஸ் கிளப்'' தெகிவளை ஹில் வீதியில் தங்குமிட வசதி செய்துள்ளது. உதவி பெற விரும்புவோர் ''இன்னர் கொழும்பு லயன்ஸ் கிளப்'' தலைவருடன் தொடர்பு கொள்ளவும்.

## ஒளிவிழா

செம்பியன்பற்று, டிச.21

குடத்தனை தென் இந்திய திருச்சபை ஆலயத்தின் ஒளிவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். (ஐ-36)

## மக்கள் முகம்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி வாசுகி சொக்கலிங்கம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முதுதத்துவமாணி (M. PHIL.)

பேராசிரியர்கள் கா. சிவத்தம்பி, அ. சண்முகதாஸ் ஆகியோரின் நெறிப்படுத்தலில் 'சங்க இலக்கியங்களில் மருதத்திணையின் சமூக, ஒழுக்க, இலக்கிய நியமங்கள் பற்றிய ஓர் ஆய்வு' என்ற ஆய்வுக் கட்டுரையை இவர் சமர்ப்பித்திருந்தார்.



யாழ்ப்பாணம்ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பாலபண்டிதர் பரீட்சையில் (1989) இரண்டாம் பிரிவிற் சித்தி எய்தியுள்ள செல்வி வாசுகி சொக்கலிங்கம்,தமது கலைமாணி (தமிழ்ச்சிறப்பு)ப் பட்டத்திற்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி நெறிப்படுத்திய 'நந்தியின் சிறுகதைகள்' என்ற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்திருந்தார்.

செல்வி வாசுகி, எழுத்தாளர் சொக்கனின் மகளும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் ஆவார்.

## நாளை

**மார்கழி 7**

திங்கட்கிழமை
திதி: அட்டமி
பிற்பகல் 4.34 வரை.
நட்சத்திரம்: உத்தரம்
முற்பகல் 11.16 வரை.
சுபநேரம்: 12.25-1.55
ராகுகாலம்: 7.55-9.25
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவீடன் பிரஜையை பணயம் வைத்தவர் சுட்டுக் கொலை

## ரஷ்யத் தலைநகரில் சம்பவம்

மொஸ்கோ, டிச. 21

மொஸ்கோவில் சுவீடன் பிரஜை ஒருவரைப் பணயக் கைதியாகப் பிடித்து வைத்திருந்த நபரை ரஷ்ய படையினர் சுட்டுக் கொன்றனர்.

கார் ஒன்றினுள் சுவீடன் பிரஜையுடன் தங்கியிருந்த அந்த நபர் தனக்கு 30 லட்சம் டொலர் பணயத் தொகையும், மூன்றாவது நாடு ஒன்றுக்குப் பாதுகாப்பாகச் செல்ல அனுமதியும் அளிக்கப்படவேண்டும் என்றும் கோரினார்.

ஆனால் காரை சுற்றி வளைத்த ரஷ்ய விசேட அதிரடிப்படையினர் அந்த நபரை சுட்டுக் கொன்று கைதியைப் பாதுகாப்பாக மீட்டனர்.

## வெற்றி உறுதி...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பு தலைமையகத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

அவரது இடத்துக்கு இந்தியாவில் ஒரு வருடம் பயிற்சியைப் பூர்த்தி செய்து விட்டு நாடு திரும்பியுள்ள மேஜர் ஜெனரல் நீல் டயஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் சூரியப்பிரகாசம் நடவடிக்கையில் முக்கிய பங்கு வகித்தவர்.

55 ஆம் படையணியின் கட்டளையிடும் அதிகாரியாக ஆரம்பத்தில் கடமையாற்றிய பிரிகேடியர் சாந்த கொட்டகொட இருமாதங்களுக்கு முன்பு இடமாற்றம் செய்யப்பட்டு அவரது இடத்துக்கு பிரிகேடியர் அன்ரன் விஜேந்திரா நியமிக்கப்பட்டார்.

தற்போது பிரிகேடியர் அன்ரன் விஜேந்திரா இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிக்கு இடமாற்றம் பெறுகின்றார்.

இதனையடுத்து 55 ஆம் படையணியில் கட்டளையிடும் அதிகாரியாக பிரிகேடியர் சரத் பொன்சேகா நியமனம் பெறுகின்றார்.

இவர் தற்போது ஆனையிறவு 54 ஆம் படைப்பிரிவு கட்டளையிடும் அதிகாரியாக பணிபுரிகின்றார்.

அதேநேரம் தற்போது வெளிநாட்டில் பயிற்சி ஒன்றில் ஈடுபட்டுள்ள பிரிகேடியர் ஜானக பெரேரா விரைவில் நாடு திரும்பவிருக்கிறார்.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைகளில் பங்கு வகிப்பதற்காக இவருக்கும் முக்கிய பதவி ஒன்று வழங்கப்படலாம் என யுத்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

(இ-21)

## விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்

தென்மராட்சி, டிச. 21

சாவகச்சேரியிலிருந்து தனங்களப்பு ஊடாக மறவன்புலோ வரையான வீதியின் இருமருங்கிலும் 50 மீற்றர் தூரத்தில் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான ஆலோசனைக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு தனங்களப்பு இராணுவ முகாமில் நடைபெறும்.

நெற்செய்கை வயல்களுக்கு அடையாளம் (இலக்கங்கள்) இடுவது பற்றி கலந்துரையாடல் நடைபெறுமென மறவன்புலோ கிராம அலுவலர் இ. மகாலிங்கம் தெரிவித்தார்.

(இ-117)

## பொலன்னறு..

(முதலாம் பக்கத் தொடர்)

இக் குண்டு வெடிப்பால் மின்சார சபைக்கு 30 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

குண்டு வெடிப்புகளை அடுத்து தேடுதல் நடத்திய பொலீஸார் அப்பகுதி அரிசி ஆலைகளில் வேலை செய்யும் சுமார் 30 தமிழர்களைக் கைதுசெய்தனர்.

கைதானவர்கள் ஹிங்குராகொட பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(இ-9-21)

# கடலில் கைதான இந்தியர் மூவரும் விடுதலையாகினர்

## இந்தியத் தூதுவரிடம் ஒப்படைக்கப்படுவர்

யாழ்ப்பாணம், டிச. 21

கடந்த ஜூலை மாதம் 17 ஆம் திகதி ஊர்காவற்றுறைக் கடலில் வைத்துக் கடற்படையால் கைது செய்யப்பட்ட இந்தியர்கள் மூவரும் கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை அமர்வு நீதிமன்றத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டு இதுவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த செபஸ்ரியன், ஜான், அனெஸ்ரன் ஆகிய மூவருமே விடுதலை செய்யப்பட்டனர்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின்படி பதில் நீதிவான் க. கேசவன் இவர்களை விடுதலை செய்தார்.

இவர்கள் மூவரும் ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறைப் பொலீஸார் இவர்களை இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் மூலம் இந்தியாவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பர்.

(இ-9)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ். மாவட்டத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான இணைப்பாளராகச் செயற்பட பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி. எம். ஜயரட்ணாவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் —

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க பாகிஸ்தான் செல்வதற்கு முன் இதற்கான ஒப்புதலை வழங்கியிருந்தார் என்றும் — கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(இ)

## எவரும்...

(முதலாம் பக்கத் தொடர்)

தல்கள் நடைபெறும் என்றும் —

இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தயார் நிலையில் உள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே. கட்சி போட்டியிட மாட்டாது என உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது பொதுமக்கள் ஐக்கியமுன்னணி தேர்தலில் போட்டியிடுவது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-8-9)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி விண்ணப்பம்

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ். வட்டலியோ கழகம் யாழ்உதைபந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் உதைப் பந்தாட்டச்சுற்றுப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிகளில் பங்கு பற்ற விரும்புவோர் இல. 5 புறாடி முன் ஒழுங்கை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முடிவுதினம் நாளை திங்கட்கிழமை ஆகும்.

(இ-7)

## தமிழ் கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒத்தி வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை 10. 30 மணிக்கு ஆரம்பமான கூட்டம் 12. 30 மணி வரையும் நடைபெற்றது.

மீண்டும் மாலை கூட்டம் நடைபெற்ற போதிலும் ரெலோ பிரதிநிதிகள் வந்து சேராததால் கூட்டத்தை இன்று கூட்டி இறுதி முடிவு எடுப்பது என்று நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் ஈ. பி. டி. பி. சார்பாக யாழ். மாவட்ட பொறுப்பாளர் வி. கே. ஜெகன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார் ஆகியோரும் —

புளொட் சார்பாக அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் குரு ஆகியோரும் —

ஈ. பி. ஆர். எல். எவ் சார்பாக அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், தம்பிராசா சுபத்திரன், தர்மராஜா வில்சன், திருநாவுக்கரசு சிறிதரன் ஆகியோரும் —

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக எஸ். சிவபாலனும் நேற்றைய கூட்டத்தில்கலந்து கொண்டனர்.

நேற்றைய கூட்டத்தில், தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கூட்டணி வலியுறுத்தி இருந்தது.

ஏனைய தமிழ்க் கட்சிகள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தன.

இன்று மீண்டும் கூட்டம் நடைபெறும் போது ரெலோ அமைப்பின் முதல்வர் சிவாஜிலிங்கம் கூட்டத்தில் கலந்து கொள்வார் என்றும் —

தேர்தல் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7-9)

## பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அதே சமயம் நேற்று முன்தினம் இரவு கும்புறுமுலை இராணுவ முகாமிலிருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கிவேட்டுக்களில் இரு சிறுவர்கள் காயமடைந்து வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-21)


மாபெரும் தள்ளுபடி விற்பனை

21 - 12 - 1997 முதல் 31 - 12 - 1997 வரை

அனைத்து ஆடை ரகங்களுக்கும்

கோபிகா ஆடை அகம்

04, நவீனசந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.

04, NEW MARKET (INSIDE) JAFFNA.

(சி/2422)

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

'மகாநதி'யின்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி விற்பனை

10% முதல் 20% வரையிலான சிறப்புக் கழிவு

இத்தள்ளுபடி 31—12—1997 வரை

புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்

நத்தார் புதுவருட புடைவைகளுக்கு

மகாநதி புடைவை அகம்

(முகூர்த்த பட்டுப் புடைவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

4, நவீன சந்தை, சாவகச்சேரி.

(சி/2406)


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 18 — 11 — 1936 | 04 — 12 — 1987 |

### இராசதுரை பஞ்சாட்சரம்

(ஸ்தாபகர், அருள்முருகன் நகையகம்)

திதி: 13 — 12 — 97

ஈர் ஐந்து வருடங்கள் சென்றதையா
ஆறிடுமோ எம் மனது
குடும்பத்தின் குல விளக்கே — இன்று
கும்பிடும் தெய்வமாகி விட்டீர்!
பத்தாண்டல்ல எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் — உங்கள் நினைவுடன்

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ப. சிவபாஸ்கரன்
சாரங்கா நகை மாடம்,
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(51991)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org